610

தேசபக்த கீதம்.

ஈரோடு

எஸ். டி. சுப்ரமண்ய யோகி

இயற்றியது.

O-,1M54,T
N24
18108

gistered. விலை அணா 8.

ஓம்.

தேசபக்த கீதம்

ஈரோடு எஸ். டி. சுப்ரமண்யயோகி
இயற்றியது.

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரால்
பரிசோதிக்கப் பெற்றது.

எஸ். டி. சுப்ரமண்யம்
91-அக்ரகாரம் தெரு, ஈரோடு.

Registered Copy right.] [Price As. 8.

Printed at the
Noble Press,
Madras, S. E.

உரிமையுரை.

அன்னையே யனைய வன்போ
டருந்தமி ழமுத மூட்டி
நன்னயக் கவிப்ப தாகை
நாட்டினன் என்ம னத்துள்
என்னதோர் சிறிய தந்தை
இன்கவி வேங்க டேசன்
அன்னவன் பதத்தி லிந்நூல்
அணிபெற விளங்க மாதோ

முகவுரை.

நான் நாடோறும் மாலை வேளையில் எனது நண்பர் சிலருடன் உல்லாசமாக ஸம்பாஷித்துக் கொண்டே ஜனசந்தடி யில்லாத இடத்தில் உலாவிக் கொண்டு கடவுளின் ஸ்ருஷ்டி விநோதங்களைக் கவனிப்பதுண்டு. அப்படிப் போய் வருகையில் ஒருநாள் நானும் என்நண்பரும் எங்களூர் வாய்க்காலுக்கருகே ஓரிடத்தில் உட்கார்ந்து ஸம்பாஷித்தோம்.

காற்று மனோகரமாக வீசியது. இடமும் நாற்புறமும் கழனிகள் சூழ்ந்து பார்வைக்கு இன்பந்தருவதாயிருந்தது. ஆதலின் அன்று இரவு ஏழரைமணிவரையில் நாங்கள் ஸம்பாஷித்துக் கொண்டே இருந்துவிட்டோம்.

அப்பொழுது நல்ல நிலாக்காலம். ஆதலால் வெண்மதியின் தண்கதிர்கள் வெண்ணிழல் பரப்பியது. கழனிகளிலுள்ள பயிர் பச்சைப்பாயெனப் பிரகாசித்தது. வாயக்காலில் நீர் சலசலவென்ற சப்தத்துடன் ஓடியது. அங்கு ஜனசஞ்சாரமற் றிருந்தமையினால் அந்த வேளையில் அந்த இடத்து அமைதியானது எனக்குப் பரமானந்தந்தந்தது. அந்த ஆநந்தத்தில் என் உள்ளே "மோனமேன்பது ஞானவரம்பு" என்னும் ஔவைப் பிராட்டியாரின் அமுதத் திருவாக்கு உதயமாயிற்று.

அப்பால் என் மனமானது நண்பர்களுடைய பேச்சைக் கவனிக்கவில்லை. என்னையுமறந்தேன் நான்; ஆநந்தத்திலடங்கினேன். அந்தச் சமயத்தில்,

அந்திப் பொழுதே—அருள்
அந்திப் பொழுதே—அன்பே
அந்திப் பொழுதே—என்றன்
அறிவினுள்ளும் புறமும் மயக்கும்—அந்திப்;

என்றுபாடத் தொடங்கினேன்.

அதனைக்கண்ட என் நண்பன் "நண்ப, உனக்குப் பாடுந் திறமையுண்டெனத் தெரிகிறது. அன்றியும் நீ தேவிதாசனுகவும் இருக்கிருய். ஆதலின் பாரததேவியின் மேல் ஏதாவது பாடக் கூடாதா?" என வினவினன்.

அவன் கேட்டதும் என் உடல் சிலிர்த்தது. உள்ளம் பூரித்தது. மகிழ்ச்சியினுல் உடனே அவனை நோக்கி, "நண்ப, பாடலாம்; உலகம் ஏற்கும் வண்ணம் பாடும்படியான சக்தி எனக்கு இருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆயினும் நீ இப்போது 'பாடு' என்று கூறியதையே தேவியின் கட்டளையாகக் கொண்டு, ஜகதம்பிகையின் தியானத்திலிருந்து முயற்சி செய்கிறேன்" என்று விடைபகர்ந்தேன்.

அப்பால் அங்கிருந்து புறப்பட்டு நாங்கள் வீடு போய்ச் சேர்ந்தோம். வீட்டில் எனக்கு உண்ணும்பொழுதும் ஒன்றைப் பண்ணும்பொழுதும் படுக்கும் பொழுதும் "தேவியின்மீது பாடவேண்டும் எப்படியாவது" என்ற அவாவே ஊடாடியது.

படுத்த பிறகும் தூக்கம் வரவேயில்லை. அந்த நினைப்பே என்னைப் பாதித்தது. அதனை மறக்க நான் என்னென்னவோ வழி தேடினேன். முடியவில்லை. அப்பால் மறுநாள் முதல் பாட ஆரம்பித்து ஜகதீசுவரியின் திருவருளால் இந்நூலை ஒருவாறு முடித்தேன். எனக்குத் தமிழில் அதிக அறிவில்லை. கவிபுனையும் சக்தியும் கிடையாது. ஆயினும் பராசக்தியின் த்யான வன்மையினால் இது அமைந்தது. இது தான் எனது முதல் நூல்.

இந்நூலை அச்சிட எண்ணமுண்டாயது. தக்க பண்டிதரிடம் காட்டாமலச்சிட மனமுண்டாகாமையின் என்னுடைய நெருங்கிய உறவினரும் பல நூல்களெழுதி உலகுக்குபகரித்துவருகிறவரும் பாலவிநோதினிப் பத்திரிகாசிரியருமாகிய வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதியவர்களிடம் கொடுத்து இதனை ஒரு முறை பார்வையிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர் என்மீது இரக்கங் கொண்டு 'உன்னுடைய இந்த முயற்சி சிறந்தது. இந்தப் பாடல்களில் உயர்ந்த கருத்துகளும் உருக்கமும் அமைந்திருக்கின்றன. ஆதலின் நீ இப்படிப்பட்ட முயற்சியில் மேன்மேலும் உழைப்பது உலக உபகாரமாயிருக்கும். ஆகையினால் நீ இன்னும் படிக்க வேண்டிய நூல்கள் பலவுண்டு; அவைகளைக் கஷ்டப்பட்டுப் ப்டித்துத் தேர்ந்து இப்படிப்பட்ட முயற்சியில் இறங்குங் காலத்தில் நீ பிர்மாநந்தம் அநுபவிப்பாய். உன் முயற்சி உலகில் என்றுமறியாததாய் விளங்கி நற்பயன் தரும்' என்று கூறி இதனைப் பரிசோதித்துத் தந்தார்.

அவருடைய நன்றியும் அவர் கூறிய புத்திமதியும் ஆசீர்வாதமும் நான் என்றென்றும் என் நினைவிலே கொள்ளக் கடமைப்பட்டவனாகிறேனாதலால் அவர்க்கு என் மனமார்ந்த வந்தனம் பல செலுத்துகின்றேன்.

கற்றறிந்த பெரியோர்களும் உலகஞானத்திலும் அநுபவத்திலும் முதிர்ச்சி யடைந்த பெரியோர்களும் சிறியேனியற்றிய இந்நூலிலேகாணும் பிழைகளைப் பொருட் படுத்தாது பாரததேவியின் திருநாமம் பொதிந்துள்ளதாதலின் இதன் கண்ணுள்ள அந்தப்பெருமை மாத்திர மேற்கொண்டு என்னை ஆசீர்வதிக்குமாறு வந்தனத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

ஈரோடு சக்திதாஸன்

2—4—24.

சாற்றுக்கவி

"பாலவிநோதினி" பத்திரிகாசிரியர்

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதி

இயற்றியவை

வெண்பா.

"கல்லுஞ்சொல் லாதோ கவி" யென்ற கம்பனருட்
சொல்லினோர் உண்மை துலங்கியதால்—நல்லகுணம்
வாய்ந்தசுப்ர மண்யன் வழுத்தியவிக் கீதம்
ஆய்ந்தவிடத் தென்ற னகம்

வாலைதந்த கீதமிது வாலிபன் கீதமல்ல
ஞாலமுய்ய வந்ததிது நாடுங்கால் - சூலி
சிவையினருள் பெற்றார் செய்வதிது தானே
கவிகாள மேகன் கவி.

சாற்றுக்கவி.

ஈரோடு

E. P. Venkatachalam chettiar avl.

அன்பிற் களிப்பவள் ஆருயிர் சமைப்பவள்
இன்பந் தருபவள் துன்ப மொழிப்பவள்
காளியென் போர்தம் கருத்தி லிருப்பவள்
ஆளியின் மீதமர் அம்பிகை பாதம்
போற்றும் புலவன் புனிதன் ஞானி
ஏற்ற மிக்க வெழில்சேர் யோகி
குணவே லென்னும் கோமான் சீடன்
கணமும் கவலை கருதா நெறியோன்
சாந்தக் கடலில் நீந்திக் களிப்போன்
காந்தியி னுயர்நிலை கண்டு மகிழ்வோன்
வரகவி சுப்பிர மணிய பாரதி
உறவினன் சுப்பிர மணியனின் தேச
பக்த கீதம் பாருல கெங்கும்
சக்தியி னருளால் சந்ததந் திகழுக.

நண்பரின் அபிப்பிராயம்.

இந்நூலாசிரியரை எனக்கு அநேக நாட்களாகத் தெரியும். இவர் படிக்கும்பள்ளியிலேயே யானும்பயின்று வருகிறேன். சுமார் இரண்டு வருடகாலமாக இருவரும் ஒரே அறையில் வதிந்து வருகிறோம். ஆகையால் இவருடைய குணங்களைப்பற்றி எனக்குத் தெரிவதைப்போல் வேறெவர்க்கும் தெரியாதென நம்புகிறேன். இந்த இரண்டு வருடமும் எனது வாழ்நாளில் மிகவும் பாக்யமுற்ற நாட்களாகும். எனதுநண்பர் அவ்வப்போது யோகநிலையினின்று எழுந்து ஏகமாய்ப்பொழியும் இன்கவிகள் என் மனத்திற்குகந்த அமுதமாயிருக்கும். அவரது சாந்த குணம் எவரையும் தம் முட்படுத்தும் சக்திவாய்ந்தது. அவரதுகுணங்கள் உண்மையில்பல்லோராலும்விரும்பத் தக்கவைகள். அவரது வார்த்தையின் சக்தி அபாரம். அவர் வார்த்தை அவரெதிர்ப்பட்ட ஒவ்வொருவனுடைய உள்ளத்தையும் கலக்கிச் கொள்ளை கொள்ளுந் தகைமைத்து. இத்தகையார் சரிதம் ஒவ்வொரு வருக்கும் தெரிந்திருக்க வேண்டு மாகையால் அன்னார்சரிதையைச் சிறிது ஆராய்வாம்.

இவர் சேலம் ஜில்லாவில் சங்ககிரி என்னும் ஊரில் பிறந்தவர். ஐந்தாவது வயதில் இவர் நம்மவர் வழக்கப்படி பள்ளிக்கூடத்தில் வைக்கப்பெற்றார். இவர் அங்கு நான்காவது வகுப்புவரை படித்தார். பின்பு ஈரோட்

டில் மஹாஜன ஹைஸ்கூலில் படிக்க ஆரம்பித்து இப்பொழுதும் அங்கு தான் படித்து வருகிறார். அவர் மனம் பள்ளிக் கல்வியிற் செல்லவில்லை. பள்ளிக்கணக்குப் புள்ளிக்குதவாதென இவர் அடிக்கடி சொல்வதுண்டு. பள்ளிக்கூடத்தில் பாடம் நடக்கையில் இவர் பாட்டெழுதிக் கொண்டிருப்பார்.

இரண்டு வருடத்திற்கு முன் இவர் இருந்த இடமே தெரியாதிருந்தது. இவர் ஒருவருடனும் அதிகம் பேசார். எப்பொழுதும் தனித்தே யிருப்பார். ஆயினும் எவ்வாறோ இவ்விரு வருடங்களுக்குள் இவரை யறியாதார் ஒருவருமில்லை யென அவ்வளவு பேர் போனவராய் விட்டார். சிலர் இவரைப் பைத்தியம் என்றனர்; சிலர் பக்தர் என்றனர்; சிலர் எல்லோரையும் ஸந்யாசியாக்க வந்த தீயன் என்றனர். ஒரு சமயம் சிலர் இவரை யடிக்கவும் பிரயத்தனம் செய்தனர். ஆனால் இவர் சித்தம் அவற்றால் கொஞ்சமும் கலைவதில்லை. இவர் தாம் பிடித்தபிடியைவிடாமல் தமதுழைப்பிலே கவனஞ் செலுத்தி வந்தார். சின்னாட்களில் பலர் இவரது சொல்லைக் கடைப்பிடிக்கலாயினர். இவரது எதிரிகளிற்கூடச் சிலர் இவரைப் பின்பற்றினர். எவ்வாறோ சில நாளில் பலர் இவரைப் போற்றலாயினர். இவர் அப்போற்றல்களைத் தேவிபதத்துக்கு அர்ப்பணஞ் செய்தார்.

இனியிவர் கவித்திறத்தைக் கொஞ்சம் ஆராய்வோம். இவர் காளியருட் புலவர். காளியைப்பற்றிப் பாடுவதென்றால் இவரது உள்ளத்திற்களிப்புத் ததும்பும். பின் அக்களிப்பு க்ணக்கற்ற கவிகளாக இவர் வாயினின்று வெளிப்படும். "ஓம் சக்தி" என்ற சப்தம்.

இவரது ஹ்ருதயத்தின் அடியினின்று வீரத்தோடு வெளிக்கிளம்பும். இவர்தாமே காளியெனச் சில சமயம் தம்மைப் பாவித்துக் காளிபோல் களித்துக் குதித்துச் சிரித்து நடிப்பார். ஓம் சக்தி வாழ்க! ஓம் சக்தி வாழ்க! ஓம் சக்திதாசன் சுப்பிரமணியன் பல்லாண்டு பல்லாண் டாயப் பாரினில் வாழ்க! ஓம் சக்தி ஓம்!

S. K. முத்துசாமி.

ஒரு சமயம் ஸ்வாமி இராம கிருஷ்ண பரமஹம்ஸர் "உலகத்திலுள்ள மனிதர்களெல்லோரும் பைத்யம் பிடித்தவர்களே, ஒவ்வொருவரும், மண், பெண், பொன் புகழ், உத்தியோகம், என இவைகளில் ஏதாவது ஒன் றின்மேல் பைத்தியம் பிடித்தவராகின்றனர். நானோ எல்லாம் வல்ல பரம் பொருள்மேல் பைத்தியங் கொண் டுள்ளேன்" என்று கூறியுள்ளார்; அத்தகைய பக்திப் பயித்தியங் கொண்டவர்களில் எனது மாணவன் S. D. சுப்பிரமணியனும் ஒருவன்.

நான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவனுக்கு உபாத்தியாயராக வந்த காலை, மாணவர்களிற் சிலரும், உபாத்தியாயர்களில் இரண்டொருவரும் இவனை (அவ னொரு பைத்யம்) He is a crack என்று என்னிடங் கூறியது என் நினைவுக்கு வருகின்றது. சீக்கிரத்தில் நான் அவனுக்குப் பிடித்திருக்கும் பைத்தியத்தைக் கண்டு பாராட்டினேன். அப்படிப்பட்ட பைத்தியத்தில் கொஞ்சமாவது மேல்நாட்டு நவீன நாகரிகப் பைத்தியங் கொண்ட நமது நாஸ்திகச் சிறுவர்களுக்குப் பிடிக்க வேண்டுமென்று என் மனம் பெரிதும் விழைகின்றது.

"உள்ளத்தி லுண்மை யொளி யுண்டாயின் வாக்கி னிலே ஒளியுண்டாகும்" என்ற பாரதியாரின் திருவாக் கின்படி இந்நூலாசிரியன் வயதிற் சிறியோ னாயினும் கவி யியற்றுதற் காதாரமான, பல காவியங்கள் கற்றிலானே னும், இவனது உள்ளத்தில் ஊற்றெடுத்துத் துள்ளிப் பெருகும் பக்தி வெள்ளமே பாட்டுகளாகி வெளி வந்தி ருக்கின்றது. தெய்வ பக்தியில் எப்படியோ அப்படியே இவன் தேச பக்தியிலும் சிறந்தவன். இவைகளை யெல் லாம் வாய்மாத்திரத்தில் நிறுத்திவிடாமல் காரியத்தில் காட்டிவருகின்றான். பரீக்ஷை பாஸ் பண்ணுவதையே புருஷார்த்தமாகவும், பண்டை நாகரிகத்தைப் பழித்து நாஸ்திகத்தில் நம்பிக்கை கொள்வதையே நாகரிகமாக வும், எண்ணியுள்ள மாணவர்களுக்கு மதாபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியன உண்டாகும் பொருட்டு 'ஸ்ரீ பாரதி நிலயம்' என்ற உயர்ந்த நோக்கங் களைக் கொண்ட வாலிபர் ஸங்க மொன்றை ஸ்தாபித்து தன்னா லியன்ற தொண்டு தன் தாய்நாட்டிற்குச் செய்து வருகின்றான். எல்லாம் வல்ல கருணாநிதி இவனுக்கு உற் சாகத்தை வளர்த்துத் தேசசேவையில் நீடித்துழைக்க ஆற்றலும், ஆயுளும் அருள்வாராக.

S. மீனாக்ஷிசுந்தர முதலியார், B. A.

சரித்திராசிரியர்,

மஹாராஜன் ஹைஸ்கூல் ஈரோடு.

வேண்டுகோள்.

எந்த மஹாசக்தியி னருளால் இவ்வண்ட பிண்ட சராசரங்களும் காரியமாக்கப்பட்டனவோ, எந்த மஹா சக்தி பாலில் நெய்போலும், எள்ளுள் எண்ணெய் போலும், யாங்கணும் நிறைந்திருக்கின்றனளோ, எந்த சக்தியால் திரிமூர்த்திகள் முறையே ஆக்கல் காத்தல், அழித்தல் என்னும் முத் தொழிலைச் செய்கின்ற னரோ அத்தகைய மகாசக்தியை மனதிலுன்னி அவ ளருளாலே இப்புத்தகத்தை எழுத ஆரம்பிக்கின்றேன். "பாட்டு வித்தால் யாரொருவர் பாடாதாரே" என்பதை என்விஷயத்தில் மஹா சக்தி - தாயினு மனைய அன்போ டென்னை ஆட்கொண்ட பராசக்தி - உறுதிப்படுத்துவா ளென்று நம்புகிறேன். ஓம் சக்தி வாழ்க.

இப்படிக்கு,

சக்தி தாசன்.

புத்தகம் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,
புதுப்பாக்கம், இராயப்பேட்டை போஸ்டு,
சென்னை.

SWARAJ

ஓம் :

தேசபக்தகீதம்.

காப்பு.

சீர்பூத்த * சக்தி திருவருளை யான்பேச
நீர்பூத்த வேணி நிமலனருள்—ஏர்பூத்த
குஞ்சரத் தானனத்துக் கோமான் கணபதியின்
அஞ்சரண மாமேன் னரண்.

நூல்

பாரதமாதா துதி

ஓங்காரத் தலைவியைப் பாரத தேவியைப்
போற்றுவாம்—தினம்
உள்ளம் உருக உருகப் பலதுதி
சாற்றுவாம்

---

* சத்தி - பாரதமாதா.

நீங்காத காதலுடன் அன்னை தன்னையே
வாழ்த்துவாம்—நமை
நேரும் பவப் பிணி தீரமனத்தினில்
ஆழ்த்துவாம்
சாங்காலம் வந்து எதிர்த்திடி னுமன்னை
தன்திறம்—நம்
சாவையும் நீக்கி வலிமை தருமொரு
மந்திரம்
ஏன்காணும் சோம்பித் திரிந்துவா ளுளைவீண்
ஆக்குறீர்—நம்
இந்தியத் தாயினைப் போற்றிப் பழவினை
நீக்குவீர். 1

முத்தரைச் சித்தரை முனிவரைப் பெற்றவென்
அன்னையின்—செம்
முளரிப் பொற்பாதங்கள் போற்றி வணங்கிய
பின்னையே
சக்தி பிறந்தது பேச்சிலும் மூச்சிலும்
சக்தியே—என்
சகலவங் கங்களு மானந்த மாரி
பொழிந்தவே
சித்தங்களித்தது ஜீவன் றுயின்றது
சித்திலே—என்னைச்
சேர்த்துக் கொண்டாளன்னை அடியவர் கூட்டத்
தொருவனாய்

சித்தம் யோகநிலை பெற்று விளங்கிடக்
கருதியே—என்றன்
சீரான அன்னையாம் பாரத தேவியே
சக்தி ஓம். 2

சத்தியம் சத்தியம் சத்தியம் முக்காலும்
சத்தியம்—எங்கள்
சாச்வதமான நிலத்தினை வாழ்த்துவோம்
சத்தியம்
பக்தியினாலே பரமனை எம்முள்ளே
கட்டுவோம்—தேச
பக்தியினா லேயெம் தேசத்தைக் காத்திட
முந்துவோம்
அத்து விதநிலை தன்னை யடைந்து மெய்
அறைகுவோம்—பெரும்
ஆனந்தங் கொண்டு கொடுமையெலாம்வீட்டித்
தள்ளுவோம்
சித்திபெற விடையூறு வரிலென்றும்
செப்புவோம்—எம்
சீரான அன்னையின் மந்திரமாம் வந்தே
மாதரம். 3

வந்தேமாதரம், வந்தேமாதரம், வந்தேமாதரமே.

என்ற (மெட்டு)

வெண்பனி மூடிய விண்தொடு மாமலை
வெற்றிமு டிகவிழ்க்க
விண்நதி கங்கையும் சிந்துவு முனதெழில்
முகமதி யைத்துடைக்க

வேலைமுளைத்த குமரி மரைமலர்
மீதடி தான்வைத்து
விந்திய மாமலைப் பீடத் தமர்ந்தருள்
வித்தகி பராசக்தி

பண்படுதீங் குரல் தும்புரு நாரதர்
பாடுந் தயாபரியே
பக்தர்கள் முக்தர்கள் சித்தர்கள்யாவரும்
பணியும் பராபரையே

பண்ணவி யாரணி பாலை யிலக்குமி
பைரவி பார் வதியே
பாரதர் முப்பது கோடிமக்கள் புகழ்
பாரத மாதாவே

கண்படு மெய்பொரு ளும்பொய் யெனச்சிவம்
கண்டவர்க் கருள்தாயே
கல்லால் நீழலில் சொல்லா மறைநெறி
கழற மகிழ்ந்தவளே

கண்ணன் நவின்றநற் கீதையின் மெய்ப்பொருள்
கண்டு சிறந்தவளே
காரணி நாரணி பூரணி யென்பவர்
கண்முன் நிற்பவளே
மண்படு மாந்தர்கள் மண்படா றென்றிடும்
மாட்சி மொழிந்தவளே
மங்கையர் கற்பினில் எங்கும் நிகராறு
மாண்பு படைத்தவளே
வாழிநீடூழி வாழி யுனதருள்
மாரி வழங்கிநீயே
வந்தே மாதரம் வந்தே மாதரம்
வந்தே மாதரமே. 1

ஆரியர் தேவியே சீரிய நெறிதந்
தாளுந் தயாபரியே
ஆரியம் த்ராவிட மென்னு மொழிகளில்
ஆரணந் தந்தவளே
ஆதரமாய்நிதம் மாதா வெனச்சொலும்
அன்பர்க் கருள்பவளே
ஆதி மநுமுதல் நீதி யிறைபலர்
ஆட்சி மகிழ்ந்தவளே
வீரியர் பலபேர் ஆரிய ரெனவே
விளங்க வந்தவளே
வீரியனாகிய அர்ஜுன னெனுமொரு
வில்லியைத் தந்தவளே

விதரணை தெரிந்து கதைகொண் டடல்புரி
வீமனைப் பயந்தவளே

விற்பனன் அசுவத் தாமனைப் பயந்த
வீர துரந்தரியே

வேண்டுவ தந்து புகழ்கொண்ட கர்ணனும்
மேலோன் றனைப்பெற்றாய்

சீரியவென் னுயிர் போகும்வரை மணம்
செய்யே னெனச்சபதச்

செம்மொழி செப்பிய தீரனும் வீடுமச்
சிங்கந் தனைத்தந்தோய்

சிவசிவவெனச் சொலிச் சாவைக்கடந்த
சிறுவனை ஈன்றவளே

செய்கையி லூக்கம் மிகுந்த பகீரத
தீரனைப் பெற்றவளே

மாரி யெனப்பொழி உந்த னருளெனும்
மாரி விழைந்திருகண்

மாரிபொழிந்து மயங்கித் தவிக்கின்றோம்
மாதா வருள்செய்வாய்

வாழிய இந்தியர் வாழிய தேசியம்
வாழிய எம் முடைமை

வாழிய தலைவர்கள் வந்தே மாதரம்
வந்தே மாதரமே. 2

அன்னைக்குத் தேறுதல்கூறல்

விருத்தம்

உலகமெலா முணர்விழந்து முடையிழந்துங்
 கொடுங்கானில் உலவுங்காலை
இலகுநல நாகரிக வெழிற்கொடியை யெழிலிவரை
 இலங்க வைத்துப்
பலகலைகள் பலவறங்கள் பலஞான தத்துவங்கள்
 பயிலத் தந்தாய்
நிலமடந்தை யெழில்முகத்தின் திலகமென
 ஒளிர்தாயே நிமலி நீயே. 1

எந்நாட்டி னருமுனக்கோர் கடல்வழியைக்
 காண்பதற்கா யெண்ணி யெண்ணிப்
பன்னாட்கள் மிகவருந்திப் பலவழியாய்ச்
 சென்றுழன்று பதைத்தா ரென்னில்
அந்நாளி லுன்னருமை யென்னவெனச்
 செப்புவதிங் கதற்கு மாறாய்
இந்நாளிற் படுந்துயரம் எண்ணற்ற வானாலும்
 இதையம் நோகேம் 2

தருமமலால் அதர்மமொரு காலத்தும்
 ஜயங்கொள்ளா தாத லாலே
அருமைபெறு மற்புதனும் கடவுளொரு
 காலத்தும் அசட்டுப் பேய்கள்
பெருமையுறச் செய்துவிடான் கூற்றுவனை
 யும்வென்ற பெருமை யாளன்

தருமவழி வம்சவழி வந்தவர்கள் தங்கருமம்
தவறு வாரோ. 3

"புண்ணியந்தான் குறைந்திட்டால் பாவமது
மிகுந்துவிட்டால் புவியிற் றோன்றிப்
புண்ணியத்தை நிலைநிறுத்திப் பாவத்தைக்
கொல்வன்" எனப் புகன்ற கண்ணன்
புண்ணியனும் காந்தியெனும் பெயருடனிப்
பூதலத்தே போந்தா னந்தப்
புண்ணியனின் நல்வார்த்தை கடைப்பிடித்துப்
புவியுள்ளோர் புகழ நிற்போம் 4

கோவமது மிகுந்து விட்டால் கண்ணபிரான்
கொடுமை செய்யுங் கொடிய ரெல்லாஞ்
சாவடைய வேதன்கைக் கொண்டவொரு
ராட்டையெனும் சக்ரந் தன்னை
ஆவலுடன் விறுவிறெனச் சுழற்றிடுவார்
சிலநாளில் அதுதானுன்றன்
தேவையுள பொருளெல்லாம் மல்கநலஞ்
செய்து வைத்துத் திகழுந் தாயே. 5

என்குறைநீ கேளாயோ என்வருத்தம் பாராயோ
என்றன் கண்ணீர்
உன்னடியைச் சாரலையோ சார்ந்துமன
மிரங்கலையோ உணர்வே ஞான
நன்மணியே பொன்மணியே என்றுநம
தையன்பதம் நண்ணித் தாழ்ந்தோம்

அம்மணியே எம்வழிபா டொருநாளும்
வீண்போகா தயரேல்நீயே. 6

காந்திமுனி தனைக்கண்டும் அவர்சொல்லும்
நெறிகண்டும் களங்கமில்லாச்
சாந்த நிலை தனைக்கண்டும் ஆத்துமத்தின்
வலிகண்டும் சந்த ராட்டை
ஏந்துகின்ற கைகண்டும் ஈசன்றன் அருள்கண்டும்
எந்தா யுன்றன்
மாந்தர்மன நிலை கண்டும் மாதர்பணி
விடைகண்டும் மயக்க மேனோ? 7

சிலநாளில் நீ யுன்றன் பண்டைநிலை தனையடைந்து
சிறந்து நிற்பாய்ப்
பல நாள்முன் உன்வயிற்றி லுதித்திட்ட
பெரியோர்போல் பல்லோர் தோன்றிக்
கலைஞான தத்துவத்தால் வண்கவியால்
உனைவளர்ப்பர் கவலேல் தாயே
பலநாடும் உனைப்பணியப் பரமனருட்
கடலதனிற் படிந்து வாழ்வாய் 8

பல்லாண்டு பல்லாண்டாய்ப் பற்பலவா
யிர வாண்டாய்ப்பகரு ஞானச்
சொல்லாண்டு துணிவாண்டு சுதந்தரத்தின்
மாண்பாண்டு சுகந்தா னுண்டு
பல்லாண்ட வனைநீக்கி ஓராண்ட வனைப்
பணிந்து பரையே தேவி

நல்லோர்கள் புகழாண்டு நலமாண்டு வாழியவென்
நாட்டுத் தாயே. 9

கீர்த்தனம்

(இராகம் - உசோனி - தாளம் - ஆதி)

பல்லவி

ஜயஜய பாரததேவியின் த்யானம்
ஜயஜய வந்தே மாதர கானம் ஜ

சரணங்கள்

உமாமஹேச்வரிமங்கள நாரி
ஓம்சக்தி பூரண மானசிங்காரி ஜ

பங்கயமலர்மீ திருந்திடும்வாணி
பரமனின்மார்பிடை ஒளிருங்கல்யாணி ஜ

சங்கரி ச்யாமள வர்ண உதாரி
சக்தி மிகுந்த பராசக்தி வீரி ஜ

பாரத சக்தீ பண்ணவி காளீ
பாங்குடைய மாகாளி ஓங்காளி ஜ

பாரத மாதாவின் வீரத் திருக்கோலம்.

சிங்கத்தின் மீது வருவாள்—அவுணர்
சிரங்கள் துணித்து மகிழ்வாள்
அங்குநி றைந்துமே ஓடும்—குருதி
ஆற்றில் திளைத்துக் குளிப்பாள் 1

சூடரைப் பிளந்ததிற் கோத்த—அவுணர்
குருதி வழியும் சிரங்கள்
உடலுக் கணியாகும் மாலே—என்னே!
உத்தமி தன்வீரக் கோலம். 2

நெற்றி விழியைத் திறந்தே—தீயர்
நீறுபடக் கண்டு நிற்பாள்
உற்றவளைப் பணிந்தோரை—அவள்
உள்ளத்தி லன்போ டணைப்பாள் 3

செங்கையிற் சூலம் பிடிப்பாள்—அதைத்
திசை தொறும் வீசியடிப்பாள்
பங்கப் படுத்தி விடுவாள்—கொடிய
பாழான மாயை கெடுப்பாள் 4

துள்ளித் துள்ளித் துயர்தன்னை—நோக்கித்
தூத்தூ! தூரத்தூர வென்பாள்
கள்ளர்கள் பள்ளர்க ளானோர்—அவளைக்
கண்ணீர்விட் டேதுதி செய்வார் 5

கண்ணைச் சுழற்றிச் சுழற்றிப்—பத்துக்
கைகளைக் கொட்டி விரட்டி
எண்ணற்ற தீயர்கள் சாக—வீர
இன்பத் தேன்மண்டி நடிப்பாள் 6

அண்டங்கள் பிண்டங்கள் யாவும்—இந்த
ஆதித் தனிப்பெருஞ் சக்தி
கண்டவரேயகக்கண்ணோர்—இதைக்
காணாதவர் விழிப் புண்ணோர். 7

அன்னையின் சேனையைப் பாரீர்—அவள்
அன்பராம் வீரரைக் காணீர்
முன்னர் இடாகினிக் கூட்டம்—மற்றும்
முனியும் பைசாசர் கூட்டம் 8

ஆரிய வீரர்கள் கூட்டம்—நம்
அருந்துருக்கர் படைக் கூட்டம்
சீரியர் கிருஸ்தவர் கூட்டம்—பெரும்
தேவர்கள் மொய்த்திடுங் கூட்டம் 9

வந்தேமாதர கோஷம்—அது
வானையிடித்துத் திரும்பும்
சந்தமிகுந் துயர் ராட்டை—அந்தச்
சக்ரம் எங்கெங்குமே தோன்றும் 10

கண்ணனைப் பார்த்தனைக் காணீர்—வீரக்
கடம்பன் வேலாயுதம் காணீர்
நண்ணரும் ஆத்மசக்தி முன்—தீமை
நண்ணிடுமோ சொல்வீர் மக்காள் 11

அன்னையின் சேனையில் யாமும்—ஓர்
ஆண்சிங்கமென்று சென்றுய்வோம்
பின்னைப் பயமொன்றுமில்லை—அன்றே
பெற்றோம் சுதந்தர வாழ்வை 12

பாரதமாதா வாழ்த்து

குமரியென்னும் மரைமலர் நடுவிருந்த கொற்றவள்
இமயமே முடிகவிழ்க்க இருநதிக ளூற்றவள்
அமரினிற் சிறந்துநிற்கும் ஆரியரைப் பெற்றவள்
நமையெலாம் புரக்கும் ஞான நாயகி தாள்வாழியே. 1

பாரதனி லெங்கணும் படர்ந்துமே வருத்திடும்
பாரவெங் துயர்களைப் பகைத்து ஜீவசக்தியால்
பாரிலுள்ள புல்லரைச் செகுத்து வெற்றி பாடுவோம்
பாரத தேவி தூய பண்புமிக்க வாழியே. 2

கத்தி வில்லும் வாளுங்கொண்டு கடுகவே அடக்கினும்
சித்திரவதை செய்யினுஞ் சிறையிலிட்டு வாட்டினும்
எத்தனை வெந்துயரினு மிறந்திடா திங்கெம்மனம்
சக்திமிக்க பாரதத்தாய் சக்தியென்றும் வாழியே 3

தூங்கிநின்ற அன்னையைத் துயிலினின்றும் நீக்குவோம்
ஏங்கிநின்ற ஆரியன் ஏக்கம்நீங்கச் செய்குவோம்
பாங்குடைய இந்தியர் பதாகை தன்னைத் தூக்குவோம்
நாங்கள் வெற்றிபாடுவோம் எம் நாயகி தாள் வாழ்கவே.

வேதநாடுங் கோதில்நாடு விண்ணவர்கள் புகழும்நாடு
ஆதிநாடு நீதிநாடு ஆரியர்கள் வாழும்நாடு
ஜோதியான நாதன்நாடு சுத்தஞான தத்துவப்
போதநாடு போதியின்கீழ்ப் புத்தர் நாடு வாழ்கவே. 5

பாரதமாதா துதி

பல்லவி.

பக்தர்கள் பாவசங்காரீ
முக்தர் மனத்திலுதித்த ஓங்காரீ பக்

சரணம்.

சூலம் விடுத்துத் துடைத்திடு துன்பம்
தூயவளே சிவையே அருளின்பம் பக்

காலனை யெற்றிக் கடிந்திடும் தாயே
காரணியே அருள் புரிந்திடுநீயே பக்

புல்லர்பொய் ஞானத்தைப்போக்கி யருளாய்.
நல்லர்தமக்கு நல்வீடுமருளாய் பக்

காளி கங்காளி கராளி வீராயி
ஆளிமீதிவரும் அன்புடைநீலி பக்

பயங்கரி புங்கவி மங்களைசக்தி
பங்கமிலாத பராபரி முக்தி பக்

ஆனந்தக் களிப்பு.

ஆனந்தமானந்தமாமே—பர
மானந்தசக்தி பதம் பணிவோமே—ஆ

ஓமெனு மெழுத்தே நம்தேசம்—அதில்
உத்தமி பாரதசக்தியே வாசம்

நாமனுதினமுமே நேசம்—வைத்து
நாளும் வணங்கிடப் பாபங்கள் நாசம்—ஆ

குமரிமுனையினில் நின்று—வெற்றிக்
குறியான சூலத்தைக் கையினிற்கொண்டு
அமரிக்கையா யிருவென்று—ஓர்
அங்கையைக்காட்டி அருள்வது கண்டு ஆ

முப்பழரசத்தினைக்கூட்டி—அதில்
முழுவதும் சர்க்கரை கற்கண்டு போட்டு
ஒப்பரும் தேன் நெய் பாலாட்டி—அதை
உண்ணுவதைவிட ஆனந்தங்காட்டும் ஆ

அன்னையி னின்ப முகத்தைக்—காண
ஆனந்தம் பொங்கி யமிழ்த்துதகத்தை
சொன்னலன்னை மந்திரத்தை—அதில்
சுகமொன்றுதோன்றி மறைக்குதுளத்தை ஆ

கூடிவினைகள் செய்வோமே—ஆயின்
கோடி வினைகளைச் செய்திடலாமே
நாடி யிவ்வுண்மையை நாமே—நம்
நாட்டினைக் காத்துப் பிழைத்திடுவோமே ஆ

ஒற்றுமையே மிகக்கொண்டு—நம்
உத்தமபாரததேவியின் தொண்டு
இத்தினமே செய் வோம்நன்று—மனம்
இணங்கிடில் துன்பங்கள் யாவுமேகுன்றும் ஆ

வந்தே மாதரமென்றும்—பெரும்
வல்லமைபெற்று நாம் மாயயைக்கொன்று
சிந்தை மகிழ்ச்சியிலென்றும்—நம்
ஜீவனுறங்கிச் சிவமாதல் என்று ஆ

கத்தியால் குத்தினும் அஞ்சேம்—எமைக்
கடுங்குண்டு பாய்ந்து சிதைக்கினுமஞ்சேம்
சித்திரவதை யினுமஞ்சேம்—எங்கள்
தேவியின் மந்திரம் செப்பிடத்துஞ்சேம் ஆ

வேதங்கள் தோன்றியநாடு—ஞான
வீரர் பல்லாயிரர் தோன்றியநாடு
கீதங்கள் தோன்றியநாடு—வீரக்
கிளர்ச்சிபொங்கிப் பெருகியநாடு ஆ

கூற்றுவன் வரினு மஞ்சோமே—அந்தக்
கூற்றுயிர்மாய்ந்ததோர் பாலனுலன்றே
நாற்றச்சடலம் நம்போமே—ஆத்ம
ஞானந்தன்னை யடைந்தே யிருப்போமே ஆ

வேறு

சிந்தை நொந்து தியங்குமப் போதினும்
வெந்து நீள் நிரயத்திடை வீழ்கினும்
பந்தமுற்றுப் பரதவிப் பெய்தினும்
வந்தேமாதரமெ ன்றுமகிழ்வமே. 1

நிந்தையுற்று நெடுஞ்சிறை வைகினும்
சிந்தைநோகச் சித்திரவதை செய்கினும்
அந்தரம்நின் றருங்குண்டு பெய்கினும்
வந்தேமாதர மென்று மகிழ்வமே. 2

அந்தகன்வந்துநம் ஆருயிர் கொள்கினும்
மந்தன்வந்து மனத்திடை வைகினும்

சந்தமிக்க கவிகளைச் சாற்றியே
வந்தேமாதர மென்றுமகிழ்வமே 3

அந்தணர்க்கிங் கருங்கலன் வேதமே
முந்தையர்க்கிங் கருங்கலன்முத்தியே
எந்தமக்கிங் கருங்கலன் இந்தியா
வந்தேமாதர மென்றுமகிழ்வமே 4

தந்தைதாயொடு சகலமும் நீயெனும்
சிந்தையுற்றுச் சிறந்தமனத்தராய்
நந்தம்தாய்தனை நண்பொடு போற்றியே
வந்தேமாதரமென்று மகிழ்வமே 5

பல்லவி.

வந்தேமாதரமே—நாங்கள்
வழுத்தும் மந்திரமே. வங்

சரணம்.

வந்தே மாதரம்
வளர் ஞானசேகரம்
சிந்தை யாதரம்
தீர்த்திடுஞ் சாகரம் வங்

ஜயஜய மந்திரம்
ஜன்ம சுதந்தரம்
பயமொழி தந்திரம்
பக்தி நிரந்தரம். வங்

காந்தி நிலைகாட்டும்
சாந்த நெறிகூட்டும்
சோர்ந்த நிலையோட்டும்
தூயபயன் நாட்டும். வந்

சமரச குணமதம்
சங்கரி சம்மதம்
அமரர் பணிபதம்
அம்பிகைபொற்பதம். வந்

வேறு சந்தம்.

வந்தே மாதரம் வந்தே மாதரம்
வந்தே மாதரமே
வந்தே மாதரம் எங்கள் சுதந்தர
வாழ்வருள் மந்திரமே. 1

ஜாதிபேத அகங்காரமின்றியே
சாற்றுவ மந்திரமே
மாதர்கள் மங்கள வாழ்வினை மேவிடும்
வண்மை யளித்திடுவோம். 2

ஒவ்வொரு வீட்டிலும் வந்தே மாதரம்
உண்மையொலி முழங்கும்.
ஒவ்வொரு சிறுவனும் வந்தேமாதரம்
உண்மைதனை யுரைப்பன். 3

மடிக்க வருங்குண்டு தன்னையும் வந்தே
மாதர மென்றிடுவோம்

அடிப்படையாக அண்டமெலாம் நிறை
அன்னையதில் இலையோ. 4

சிறை சென்ற காலத்தும் குறையற்றவர்போல்
சிந்தை மகிழ்ந்திடுவோம்
அறைதரும் பாரததேவி பராசக்தி
அம்பொற் பதம் பணிவோம். 5

வேறு.

ஜயவந்தேமாதரமே—என்பதெங்கள்
ஜன்ம சுதந்தரமே
பயமிலை துயரமிலை—பாடுவோம் எம்
பாரத தேவிதுதி. 1

சாவையும் நீக்கிவிடும்—ஞானமெனும்
சாந்தத் திருத்திவிடும்
ஆவலைத் தீர்த்துவிடும்—நம்முடைநல்
அறிவை விளக்கிவிடும். 2

மண்ணும் மடிக்காது—நம்மான்மாவை
வானும் அடக்காது
தண்ணீர் நனைக்காது—வெம்மைச்செந்
தழலு மெரிக்காது 3

காற்று மலைக்காது—எப்பொருட்கும்
காரணம் அப்பொருளே
வேற்றுமை யில்லையங்கே—நமைவிட்டால்
வேறொன்றுமில்லை யங்கே 4

கத்தியும் குத்தாது—பகைவர்தம்
கடுங்குண்டும் பாயாது
சித்தம் அலையாது—அவர்கள்தம்
சித்திரவதை கண்டே 5

சிறையே தவச்சாலை—தேவியின்
சீர்பதம் பணிவோர்க்கே
குறையொன்று மில்லையங்கே—வெற்றிநலங்
கூடி மகிழ்ந்திருப்போம். 6

தேகம் பொய் என்றோம்—தேகத்துள
தேகியே மெய்யென்றோம்
தேகத்தை மாய்த்திடலாம்—என்றாலுமெம்
தேகியும் மாய்ந்திடுமோ 7

எங்கும் பராசக்தி—அச்சக்தி
என்னுள் உளசக்தி
உங்களால் என்னாகும்—ஹேபெரும்
உலகக் கசடர்களே 8

எப்பொருளும் சக்தி—ஆதலாலே
எப்பொருள் எனைவருத்தும்
ஒப்பிலாத் தலைவன் நானே—இந்த ஓர்
உண்மை யறிகிலிரோ 9

வந்தேமாதர மென்பீர்—எங்கள்தம்
மாதாபதம் பணிவீர்
சிந்தாகுலந்தீர் சக்தி—சீர்பதம்
சிந்தனை செய்திடுவீர். 10

கொடி (வேறு)

தேசத் திருக்கொடிகாண்மினே - கண்டு
தெய்வத் திருச்சக்தி பூண்மினே
வீசும் பச்சை செம்மை வெண்மையே - ஒளி
வீசி யழித்திடும் பெண்மையே
நாசப் படுத்திடும் தீமையை - அந்த
நல்ல ராட்டை சக்ரம் நடுவிலே
நேசத்துருக்க ரிளம்பிறை - இங்கு
நேர்ந்த பராசக்தி சூலமே 1

தங்கக் கம்பத்தினிலுச்சியில் - வானைத்
தாவி விளங்குது பொற்கொடி
அங்குள்ள பேடிகள் தன்னையே - கையை
ஆட்டி அப்பாலேபோ வென்குதே
சிங்கத்தை ஒத்தவர் இந்தியர் - அவர்
சீர்திருக் கூட்டத்தைக் காணுமின்
திங்களணிந்த மெய்வேணியள் - அந்தத்
தேசியக் கொடியினைக் காப்பவள் 2

என்று மிதற்கிடை யூறிலை - இதை
எத்தனை தான்புய லாட்டினும்
கொன்றிடல் என்பது பொய்மையே - ஆனால்
கொஞ்சம் தலைதனைச் சாய்க்குமே
பின்னிடும் புயல்தனைநோக்கியே -ஹே!
பித்தா என்று தலை தூக்குமே.
மன்றிலிருந்து நடித்தவள் - அந்த
மாதா திருக்கொடி போற்றுவோம் 3

சக்தியின் தெய்வீக சக்திமுன் - மிருக
சக்தி எதிர்நின்று வெல்லுமோ
மெத்த வளர்ந்துவான் தூக்கிடும் - மலையை
வெறுமைச் சிறு எலி பேர்க்குமோ
சித்தங் குலைந்திடா எம்மையும் - இந்தச்
சில்லறைப் பேய்கள்தான் வீட்டுமோ
அத்துவிதநிலை கண்டனம் - எங்கள்
ஆனந்த சக்தியைப் போற்றுமோம் 4

வானவாரோ டுறவாடிடும் - எங்கள்
வானத்திருக்கொடி பாரடா
வானோர் பலர்வந்து போற்றிடும் - அந்த
மகிமையைக்கண்கொண்டு பாரடா
கானம் நிறைந்தவர் நாரதர் - பரத
கானத்தைக் கேட்டுக்களியடா
ஞானமிகுந்த பராசக்தி - எங்கள்
நாயகிபாதத்தைப் போற்றுவோம் 5

பாரததேவியை வேண்டல் (வேறு)

எழுமின் மக்காள் எழுமின்
விழிமின் தூக்கம் ஒழிமின்
ஒழிமின் சோம்பர் வாழ்வை
அழிமின் அச்சம் அழிமின் 1

கொடியைக் கையிற் பிடிமின்
மிடியை அகற்றிக் கடிமின்

இடியை அடிமையாம் இடியை
படியில் அகற்றத் துடிமின் 2

வந்தேமாதரம் வந்தே
வெந்தேபோயினும் சிந்தேல்
நொந்தே போயிடல் நன்றோ
எந்தாயுன்பதம் வந்தே 3

கடலும் மலையும் கடவுள்
உடலும் உயிரும் கடவுள்
இடரும் சிறையும் கடவுள்
திடமாய் எழுமின்விழிமின் 4

சித்தம் மகிழும் சத்தி
சித்திபெறு வோம்முக்தி
கத்திகொண்டு குத்தி
எத்தைக் கொல்லும் நத்தி 5

ஞானப்பாலைக் கண்டீர்
மோனப்பாலை யுண்டீர்
ஈனப்பாலைத் தீண்டீர்
மானம் நீக்கல் வேண்டீர் 6

சுதந்தர தேவிசூரி
பதந்தரு மாவிவிரி
இதந்தரும் உண்மையைக் கோரி.
சுதந்தர வாழ்வினைப்பாரீர் 7

கண்ணன் கருங்கடல் வண்ணன்
எண்ணமனைத்தையும் எண்ணும்
வண்ணமுடிக்கும் திண்ணன்
அண்ணல் பதந்தனை நண்ணும் 8

சாந்தமெய் வேதாந்தன்
போந்தசக்தியின் காந்தம்
தீர்ந்த யோகியர்வேந்தன்
காய்ந்திடும் அவன் சக்திதீமை 9

எங்கும் நிறைந்தவர் நீரே
மங்கா ஈசனும் நீரே
எங்களிடுக்கண் போச்சே
மங்கள சுதந்தரமாச்சே 10

காந்தீ வாழ்த்து

விருத்தம்.

எண்ணருந் திடமனத்தோய்
ஏற்றுநல் குணத்தின் மிக்கோய்
தண்ணரும் கருணை பூண்டோய்
சாந்தமெய்க் கடலை யுண்டோய்
நண்ணரும் ஞான வீட்டில்
நாடியே வதியு மெந்தாய்
புண்ணிய காந்தீ யுன்றன்
பொற்கழல் போற்றி போற்றி 1

தலையணை இடைக்கை யாகும்
தரையதே படுக்கை யாகும்

கலைமுடி கருத்தே யாகும்
கருணையே உருவ மாகும்
நிலையுற லகமே யாகும்
நித்தியன் பாதம் போற்றும்
நலமுள்ள காந்தி யென்னும்
ஞானியா மவன்றாள் போற்றி 2

இந்திய அன்பர் கட்குள்
இனிமைசேர் முதிய ஞகும்
முந்தையன் நௌரோ ஜீ நல்
மொழிவந்தே மாத ரமெய்
மந்திரம் உபதே சித்தான்
மந்திரம் வலிமை கொள்ளத்
தந்திரம் பலவுங் காட்டித்
தருமமே புகன்றாய் போற்றி. 3

ஆதர வற்று நிற்கும்
அன்பர்பல் லோரைக் காக்க
ஏதமே பலவு முற்றாய்
இந்தியர் மனத்தின் புன்மை
வீதரச் செய்தாய் நாங்கள்
வீரஞ்சேர் புனித ராக
போத ஒற்றுமையைக் காட்டி
புண்ணியம் புகன்றாய் போற்றி 4

எங்களுக் காக நீதான்
இடர்சிறைப் போந்தாய் பல்கால்
பங்கமு முற்றாய் பல்கால்
பண்பில்லார் போல நின்றே

எங்ஙனம் மறப்போம் யாமே
இன்பமெய்ச் சுதந்த ரத்தோய்
மங்கலில் மகிமை கொண்ட
மாதவா போற்றி போற்றி

ஜாதிபேதம்.

பேதம் பாராதீர்—ஜாதி
பேதம் பாராதீர்

பேதம் பாராதீர்—அப்
பேதத்தினுலுண்மைப் போதம் மறைந்தது
நாதியற்ருேம் நாம் - ஒரு
நன்னிலேகெட்டு அடிமைகளாயினேம்
வேதியரென்னும் - மற்றும்
வேறுகுலத்தவர் என்று பிரித்திடும்
நீதியைநீக்கி - ஒரு
நின்மலமான கடவுளேப் போற்றுவீர் - பேத

எத்தனேஜாதி - உள்
எத்தனேகட்சி யிருக்கு ததிலே
நித்தமுஞ்சண்டை - ஒன்றும்
நேராத நாளொன்றும் காணவில்லேயினி
எத்திரம் உய்வோம் - இதற்கு
ஏதும் முடிவிலே என்றிடில் தேசம்
ஒத்து வருகுமோ - அந்த
ஒற்றுமையில்லாவிடில் எல்லாம் கொட்டது - பேத

சைவனொருவன் - தன்
ஜாதி பெரிதென வைணவனையே தான்
வைதல் செய்கிறான் - அந்த
வைணவன் தானும் கோபமிகுந்துமே
சைவனை வைய - பெரும்
சண்டையுண்டாகுது போதும் போதும் இது
உய்யவேண்டுமேல் - மத
உட்பகையற்ற ஒழுக்கத்தைக் கொள்வீர் - பேத

ஞானவெறி (வேறு)

எங்குநோக்கினும் யாமிருக்கின்றோம்
எமையலாதொரு பொருளில்லை
மங்கிடோமெந்த நாளினும் யாங்கள்
மன்னர் மன்னராய் வாழுவோம் நாங்கள்
தங்குபேரொளி சக்திஓம் சக்தி
சங்கரியைப் பணிந்திடும் பக்தர்
எங்களுக்கு எதிரொன்று மில்லை
இருள்தீர் சக்தி என்றே மகிழ்வோமே 1

மாதர்வந்து மயக்கினும் கத்தி
வாளுங்கொண்டு வதைக்கினும் மெத்த
பீதியுற்றுப் பயந்து நடுங்க
பீரங்கியால் சிதைக்கினும் சித்ர
வாதைசெய்தெமை வாட்டினுமஞ்சேம்
வளர்ந்த புன்சிரிப்போடு எம் அன்னை
வேத்சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
வெற்றி சக்தியென்றே மகிழ்வோமே. 2

காளிவீரி கங்காளி சாமுண்டி
கறுத்த தெய்வம் வெறுத்தெழுங்கோப
ஆளிமீது அமர்ந்து நடிக்கும்
அம்பாள் வெள்ளிமலைச்சி குறத்தி
வாளி சூலம் கதைகள் முதலாம்
வன்மையாயுதம் பற்பல கொண்டாள்
நீலி எங்கும் நிறைந்த ஓம் சக்தி
நித்யசக்தி என்றே மகிழ்வோமே. 3

வெண்பா.

வாராய் இளங்குயிலே ! மாதா பராசக்தி
சீரார் திருநாமம் செப்பினவள்—காராவின்
மேலேறி வந்துயிரை வீட்டுகொடுங்காலனையும்
காலேற்றிச் சாகவைப்பாள் காண் 1

காண்பாய்நீ பூங்குயிலே! காளியருட்பொன்னடியை
பூண்பாய்நீ ஞானப் புதுமலரை—மாண்பரகச்
சிந்தையிலே கொண்டு சிந்திக்க வந்தருளும்
சந்தமிகு பாரதத்தாய் தான். 2

தாளைப் பணிகுயிலே ! தாளைப் பணிந்தக்கால்
கோளைக் கொடுங்கூற்றைக் கோபத்தை—மீளா
விதியைக் கெடுத்து வியன்ஞான வீட்டுள்
பதியவைக்கும் உந்தனையே பார். 3

பாடிப் புகழ்ந்துநீ பாரதமா தாபாதம்
சூடிவந் தேயென்று சொல்லுவையேல்—நாடியவை

யெல்லாங் கைகூடு மென்றுமிடும் பையின்றும்
நில்லாது மாயையுன்முன் நேர்ந்து. 4

மைவண்ண மாங்குயிலே! மாதா பராசக்தி
ஐவண்ணச் சக்தியிலே அன்புடனே-உய்வண்ணம்
காட்டிநிலே கூட்டுவான் கன்ம வினைப்பகையை
வீட்டியே யாங்கதுவே வீடு. 5

ஞானவேறி

பேருலகத்திலே—ஆ!
பேருலகத்திலே

பேருலகத்திலே—பெரும்
பேதைமைசெய்து பொழுதைக் கழிக்குறார்
பேரை விரும்புகிறார்—அந்தப்
பேசாநிலையின் பெருமையறிந்திட
நேராதமாந்தரெலாம்—அவர்
நேரும் வழியினை அருள்செய்துமே தான்
வாராய் கடவுளே—என்
வயமதனை அருணயகனே. 1

சித்தத் தவிசினிலே—சுத்த
சிவத்தை யறிந்த சிவமதாகும்
அத்துவித் நிலே—தனை
அடியோ டிகழ்ந்து கெடுகிறார்கள்
புத்தியிலா மாந்தர்—அவர்
புன்மை நெஞ்சைப் புனிதமாக்க
சித்தி யொன்றிலேயோ—என்
சிவனே அரனே பரனே செப்பு 2

அடித்தா லடிக்கட்டும்—என்னை
அடித்துப் பிடித்துத் துடிதுடிக்க
மடித்தால் மடிக்கட்டும்—உள்ளே
மன்னுகின்ற ஜோதிதானும்—
மடிந்து விழுகுமோ—பொய்
மாந்தர் தம் வார்த்தைகேட்டுப்
பிடித்த பிடியை விடுவனோ—பெரும்
பேரின்ப ஞானநிலையை யறிந்தபின் 3

தேக வீட்டுளே—ஒரு
தேகி இருக்கிறான் என அறிந்தபின்
தேகத்தை மதிப்பரோ— அந்தத்
தேகத்தை அடித்து மதித்திடினுமத்
தேகி மடிவனோ—கொடும்
தென்னவனாலும் முடியாத காரியம்
தேகங்கள் செய்யவோ—உள்
தேகியை யறிந்து தேறு மின்கள். 5

வேலன் (வேறு)

வேலன்வருக வென்று பாடுவோம்—எங்கள்
வினையையகற்றி மகிழ்ந்தாடுவோம்
காலன் பயமொழிந்து போகுமே—எங்கள்
கருத்துமுற்றும் ஜயமாகுமே. 1

வெற்றி வெற்றி என்று சொல்லுவோம்—அருள்
வீரங்கொண்டு பகையை வெல்லுவோம்
பற்று ஒழிந்துவாடி யேகுமே—பொய்
பயங்கள் நடுநடுங்கிச் சாகுமே. 2

வீரம் வீரமென்று சாற்றுவோம்—மெய்ம்மை
வீடடையும் நெறி யாற்றுவோம்
தீரம் கரையுடைந்து பாயுமே—கொடுந்
தீயர்செய்கை யெலாம் சாயுமே. 3

சாதல் வரினும்வந்து போகட்டும்—நாங்கள்
சற்றும் பயந்திடோ மென்றுகட்டும்
வீதலிலாத வெற்றி வேலனே—உன்றன்
வீரவேல் காலனின் காலனே. 4

சுதந்தர வாழ்வினைச் செய்திடு—இலையேல்
சூரவேலினாலுயிர் கொய்திடு
இதந்தரு ஞானத்தைக் காட்டிடு—இலையேல்
இன்னுயிர் கொண்டெனை வீட்டிடு. 5

வந்தேமாதரமென்று பாடுவோம் - எங்கள்
வண்மைச்சுதந்தரத்தை நாடுவோம்
சிந்தைகடந்த வடிவேலனே - எங்கள்
சிந்தையிலே வந்தருளும் பாலனே 6

கதர்மணம்

(கல்லார்க்குங் கற்றவர்க்கும் மெட்டு)

நல்லதொரு சாந்தமணம் நாற்றிசையும் மணக்கும்
நவில்தேச பக்திமணம் நன்மையுற நாறும்
எல்லையிலா அன்பெனுமோர் இன்பமணம் கமழும்
ஈசனையே உணரும்மணம் இனிமையுறப் பரவும்

சொல்லரிய ஒற்றுமையாந் தூயமணம் துலங்கும்
சோர்வெல்லாம் நீங்கவொரு சுகமணமும் வீசும்
அல்லலெலாம் நீக்குகின்ற அரியகதர்த் துணியை
அன்புடனே போற்றியேதான் அணிகின்றபொழுதே - 1

வீரமெனும்மணம் மனதில் வெற்றியென்று ததும்பும்
வித்தகஞ்சேர் நந்தேய வித்தைமணம் விளங்கும்
பாரிலுயர் நம்பாஷைப் பதமணமும் பதியும்
பாங்குடைய பாரதமா ஞானமணம் பெருகும்
சாரரிய சுதந்தரமா தேவிமணம்சாரும்
சாற்றரிய நன்மார்க்க ஸமரஸமெய் மணமும்
ஆரமுதாய்த்தித்திக்கும் அரியகதர்த்துணியை
அன்புடனே போற்றியேதான் அணிகின்றபொழுதே 2

சத்தியமா மணமுனது மனதினிடை தோன்றும்
தர்மமணம்மேலோங்கும் தளர்ச்சியெலாம் நீங்கும்
நித்தியமாம் செந்திருவின் திவ்யமணம் நிறையும்
நின்மலமெய்ஞானமெனும் நீதிமணம் பதியும்
அத்துவிதவீரமலி ஆண்மைமணம் பொங்கும்
அரியசித்தி தனையடைய ஊக்கமணம் ஓங்கும்
அத்தகைய சக்திமிகு மரிய கதர்த் துணியை
அன்புடனே போற்றியே அணிகின்ற பொழுதே. 3

வேலன் (வேறு)

கோழியுங்கூவுது காகம் கரைகுது
குக்கல் குரைக்குது வடிவேலா
நாழிகை யாயிற்று நாம்விளையாடுவோம்
நண்ணிடு வாயிங்கு வடிவேலா 1

கதிரவன் குணதிசை கதிர்விரித் தெழுகிறான்
கண்டு களிப்போம்வா வடிவேலா
நதியினோரத்திலம் மேட்டினிலே ஓடி
நண்ணிக் குதிப்போம்நாம் வடிவேலா 2

எங்கும் மலர்மணம் வீசிநிறைந்திடும்
இந்த வனத்தைக்காண் வடிவேலா
எங்கும் மயில்களி னாடல்குயில்களின்
இன்குரலைக் கேள்நீ வடிவேலா. 3

நொண்டியடித்து நான் உன்னைப்பிடிப்பேன்கால்
நோகாமல் ஓடிவா வடிவேலா
கண்டினும் இனிதாம்பல் விளையாடல்கள் கண்டு
களித்துக்குதிப்போம்வா வடிவேலா 4

கண்ணாம்பூச்சியும் கள்ளன் விளையாட்டும்
கல்லு எறிதலும் வடிவேலா
பாண்ணார் மொழிசேர் வள்ளியின் பங்கனே
பந்தும் விளையாடு வடிவேலா. 5

பம்பரஞ் சுற்றுவோம் பல்லாங்குழியாடிப்
பாடிக்குதிப்போம்நாம் வடிவேலா

அன்புடன் கோலியும் பூச்செண்டும் கொண்டு நாம்
ஆடிக்களிப்போம்வா வடிவேலா. 6

ஆடிக்களித்தது போது மினிமேலே
அமர்ந்திங்கிருப்போம் நாம் வடிவேலா
நாடிக்குளத்தின் நன்னீர் பருகியே
நாமிளப்பாறலாம் வடிவேலா. 7

அன்றொருதரம் நீ அன்புகொடுப்பதாய்
ஆணையிட்டுச்சொன்னாய் வடிவேலா
இன்றெனக்கந்த அன்பைக் கொடுத்திட்டால்
இன்பமடைவேன் நான் வடிவேலா. 8

என்று நான் சொன்னதும் இதோ விதோ என
எங்கேயோ சென்றான் வடிவேலா
இன்றெங்கு சென்றனை இன்னே வருகுவாய்
என்றனன் நானே வடிவேலா. 9

அன்பு நிறைந்தது என்னை விழுங்கிற்று
ஆனந்தம் கொண்டேன் வடிவேலா
இன்பவேல் பெற்றனன் இனியொரு பயமில்லை
ஈசனருளிய வடிவேலா. 10

கண்ணகி பாட்டு

பத்தினிக் கண்ணகியே—எம்
பழுதுபடா ரத்தினமே
சித்தமுருகுதடி—என்
ஜீவன் குழையுதடி 1

எண்ணம் சிதறுதடி—உடல்
எரிந்துகருகுதடி
கண்ணீர் வழியுதடி—என்
கையும் நடுங்குதடி 2

தொண்டை எழவில்லையே—ஒரு
சொல்லும் வரவில்லையே
அண்டர்கள் நாடும் தாயே—கொடும்
அடிமை அகற்றுவையே 3

கண்காணுநாட்டினிலே—துயர்
காப்பி கரும்புத்தோட்டம்
எண்ணிக்கையில்லார் நம்மோர்—மிக
இழிவு படுகிறுரே 4

கூலிக்கு வேலைசெய்யச்—சென்றுர்
கூடப்பிறந்தோரெலாம்
வேலியே பயிர்தின்னல்போல்—அவரை
வெறுத்தனர் அங்கியர்கள் 5

அடிமையென்ருக்கினரே—அவருக்
கானந்த மொன்றுமிலை
மிடியும் மிகுந்ததையோ—அவ்
வீணர்கள் செய்கையென்னே 6

கற்பு குலையச்செய்தார்—நம்
கண்மணி போன்றவர்கள்
பொற்பு அழிந்ததென்று—மனம்
பொங்கிப் புழுங்குகின்றுர் 7

எத்தனை நாட்கள் தானோ—இவர்
ஏங்கித் தவிப்பாரம்மா
சித்த முருகலையோ—எம்
சிவையே யம்பிகையே 8

மாதா பராசக்தியே—தென்
மதுரை எரித்தவளே
ஏதமகற்றிவிடு—இன்றேல்
எம்மை எரித்துவிடு. 9

மதுரை யெரிந்ததுபோல்—எம்
வருத்தம் என்றோ எரியும்
மதுரமொழியினளே—எம்
மதுரை மீனாக்ஷித்தாயே. 10

கல்லுமுருகுமடி—எம்
கதையினைக் கேட்டுநின்றால்
சொல்ல முடியலையே—ஞான
சுந்தரி கண்ணகியே 11

அத்வைதம்.

காற்றினைக் கூவிடுவோம்—வெங்
கனலின்முன்னே மலர் தூவிடுவோம்
சீற்றத்தைப் போக்கிடுவோம்—பெரும்
சியத்திற்குமன்பே ஆக்கிடுவோம்
வேற்றுமை கொன்றிடுவோம்—ஞான
வித்தகர்வாழ்வினிற் சென்றிடுவோம்

கூற்றை யுதைத்தவள் தான்—எங்கும்
கூடிநிறைந்த பராபரைகாண். 1

என்னை யெனக்களித்தாள்—சக்தி
இலங்கவென் மனம்படைத்தாள்
தன்னை யெனக்களித்தாள்—தன்னுள்
தங்கும் பெருஞ்சக்தி தான்படைத்தாள்
பன்னவே ஒன்றுமில்லை—அங்கு
பார்த்தாலவளில்லை யானுமில்லை
என்னவெனச் சொல்லுவேன்—நான்
எங்கும்நிறைந்திளைப்பாறுவனே. 2

வானையும் மண்ணையுமே—உள்ள
மற்ற உலகங்கள் யாவையுமே
ஞானத் திருக்கரத்தால்—வாங்கி
நாயகிதந்த உயர் பலத்தால்
மோனத் திருந்துவிட்டேன்—ஞான
முத்தியினிற் சென்று செத்து விட்டேன்
ஈனத்தை நீக்கிவிட்டேன்—என்றன்
இடரின்மேல் சக்திவேல் வீசிவிட்டேன். 3

எங்கும் நிறைந்துவிட்டேன்—நான்
ஏகாந்தமோனத் திருந்துவிட்டேன்
பங்கங்கெடுத்து விட்டேன்—ஞானப்
பதாகையென் மனத்தினில் நாட்டிவிட்டேன்
சிங்கத்தை ஒத்து விட்டேன்—வீர
சிங்க மென்றே ஆண்மைதாங்கிவிட்டேன்

எங்கள் எதிரிகளே—எம்
இன்பவேல் வருகுது ஓடுங்களே. 4

(வேறு) அன்பு.

அன்புக்கு எல்லையுண்டோ—அன்பாம்
ஆறுக் கணையுமுண்டோ
துன்பமணுகிடுமோ—தூய
அன்பு படைத்தவனை
இன்ப மிகுத்துவிடும்—என்றும்
இன்பக்கடல் குளிப்போம்
அன்புக் கழிவில்லை—நம்
ஆருயிர் செத்திடினும். 1

அன்பே சிவமாகும்—என்றே
அறைந்தார்திருமூலர்
அன்பே அகிலமெலாம்—உயிர்
அன்பில் மிதப்பவையே
அன்பர்களுக்குப்பகை—எந்த
அண்டங்களினுமில்லை
அன்புதனைப்பெற்றால்—நாம்
அனைத்துலகும் பெற்றோம். 2

அன்பு படைத்திடுவோம்—தூய
அன்பு படைத்திடுவோம்
அன்பு படைத்திடுவோம்—ஞான
ஆண்மை படைத்திடுவோம்
இன்பம் படைத்திடுவோம்—இன்ப
ஈசன்பதம் பணிவோம்

அன்பாமின்பம்படைத்தாள்—எம்
ஆதி பராசக்தியே.

(வேறு) வீரசக்தி

வீரசக்தி வேல்கள்குத்தி
வெந்து நொந்ததே—பொல்லாத
சாரமற்ற மாயவாழ்வு
சாவடைந்ததே—மெய்ஞான
தீரமுற்றுத் தாய்பதத்திற்
சிந்தைவைத்தேனே—இனிமேல்
யாரெதிர்ப்பர் என்னையிங்கே
ஆண்மை யுற்றேனே. 1

பொங்கி ஞான கங்கையாறு
போந்து சிந்தையில்—எம்பாவம்
மங்கியே போய்ப் பங்கமாக
தங்கிநிற்குதே—மெய்வீரச்
சிங்கமென்றே சிங்கவீரம்
பொங்கிவிட்டதே—இப்போது
எங்குமேதான் என்னையல்லால்
ஏதுமில்லையே. 2

கத்திவாளும் குத்தி என்னைக்
காய்க்கவல்லதோ—நான்தான்
அத்துவித சித்தனான
முத்த னல்லவோ—பொய்நான்
செத்தழிந்தேன் வெற்றிநாதம்
சீறிவந்ததே—ஓம்! ஓம்!

சக்தி சக்தி சக்தியின்மெய்ச்
சக்தி பெற்றேனே. 3

உள்ளமுற்ற கள்ளமெல்லாம்
உற் றழிந்ததே—மெய்ஞான
வெள்ளம்பொங்கி உள்ளந்தன்னைக்
கொள்ளைகொண்டதே—வாயினல்
விள்ளுதற்கு அரியதான
வெற்றி பெற்றேனே—தெய்வநற்
கள்ளை யுண்டு வெறிமிகுந்து
காளி யென்றேனே. 4

துட்டஎண்ணம் கெட்டழிந்து
பட்டு விட்டதே—வெங்கனல்
விட்டு விட்டுப் படரும்சூலம்
வெறித்துநிற்குதே—இந்தஒரு
எட்டுதிக்கும் கட்டு எல்லாம்
என்வசமாக—மெய்ஞானக்
கட்டு கட்டு என்றன்வீரக்
காளி ஓங்காரி. 5

காந்தி மனேதிடம்.

விருத்தம்

கடலது கலங்கி ணலும் காவிரி வற்றி ணலும்
இடமது பெயர்ந் திடாத இமயமே குலுங்கி ணலும்
மடமகள் பாரதப்பெண் மாந்தரைக் காக்க வந்த
திடமன முடைய காந்தி திருமனம் கலங்கி டாதே. 1

பரமது இறந்திட் டாலும் பாவமே நிறைந்திட் டாலும்
இரவிதன் இயற்கை மாறுய் மேற்றிசை எழும்பி னுலும்
அரன் மகள் பார தப்பெண் அன்பரைக் காக்க வந்த
திரமிக உடைய காந்தி திருமனம் கலங்கி டாதே 2

சத்திய மழிந்திட் டாலும் தர்மமே குறைந்திட் டாலும்
நித்திய மான வஸ்து நிலை பது பிறந்திட் டாலும்
பத்மினி பாரதப் பெண் பாலரைக் காக்க வந்த
சித்தமிக் குடைய காந்தி திருமனம் கலங்கி டாதே. 3

காளிகாதல்

நாணிக்குனியாதே—உன்றனெரு
ஞானம் வளருதடி
கோணிக்குழையாதே—உன்றனருட்
கோலம் மயக்குதடி
வாணிக்கு நாயகியே—உன்றன்சிவ
மையல் பெருகுதடி
பேணிப்பணிந்து விட்டேன்—உன்றனருட்
பேரருள் செய்திடுவாய் 1

புன்னகை செய்யாதே—உன்றனருள்
போதம் மயக்குதடி
கன்னல் மொழியாடேல்—அதிற்காம
கற்கண்டைத்தூவேல்
வண்ணக்கிளிப்பாவாய்—என்றன் நெஞ்சை
வாட்டும்வேற் கண்மானே
என்னிரு கண்மணியே—அருட்சக்தீ
எங்கும் நிறைந்தவளே. 2

கண்ணைச் சுழற்றுதே—என்றனுக்குக்
காதல்தேன் பொங்குதடி
பண்ணை விரிக்காதே—காதலின் தீ
பற்றி எரிக்குதடி
விண்ணைப்படைத்தவளே—வெற்றிவை
வேலைப்படைத்தவளே
மண்ணைப் படைத்தவளே—உன்றனொரு
மாயை வருகுதடி. 3

காளிகாதல்

பட்டு மெத்தையினிலே—யான்
படுத்துறங்கையிலே
கிட்ட நெருங்கி வந்தாள்—கொஞ்சும்
கிளி மொழி பேசி
தட்டியெழுப்பினளே—யானும்
தாவி எழுந்திருந்தேன்
அட்டமலர் தூவி—அவள்
அடி பணிந்தேனே. 1

கண்டதோர் காட்சியென்னே—அந்தக்
காட்சி யினிவருமோ.
விண்டலம் மண்டலமும்—யாவும்
விழுங்கும் பேருருவம்
எண்டிசையும் பரவி—ஒளி
எங்கும் நிறைந்ததுவே
கண்டவுடன் காதல்—மிக
கண்டுகளித்தனனே. 2

செஞ்சடை தொங்கிடவே—நடு
திங்கள் விளங்கிடவே
மிஞ்சக் கனல் கக்கும்—நெற்றி
மேவும் திருக்கண்ணும்.
அஞ்சலெனுங்குறியாய்—காளி
அங்கையினிற் சூலமும்
பஞ்செனவே பறக்கும்—காணில்
பாவங்கள் யாவுமே 3

புன்னகை செய்துநின்ருள்—அந்தப்
புன்னகையில் மகிழ்ந்தேன்
என்னிரு கண்மணியே—இங்கு
ஏனோநீ வந்தாயென்றேன்
உன்னை யணைக்கவென்ருள்—உடன்
உள்ள முருகியேதான்
தன்னை யணைக்கச்சென்றேன்—உடன்
தாவி மறைந்தனளே 4

கொஞ்ச நேரத்திற்கண்டேன்—ஏன்
கோபமோ என்று கேட்டேன்
நெஞ்சம் வருத்தமுற்றேன்—உனை
நீங்கின காலமெல்லாம்
தஞ்சமிதுசமையம்—எனைத்
தாவி யணைத்திடென்றேன்
அஞ்சேல் அஞ்சேலென்ருள்—உடன்
அங்கைக் குறிசெய்தாள் 5

செத்து இறந்தேன்யான்—அந்தச்
சிவையின் அருளொளியில்
அத்துவிதமென்ருள்—எங்கும்
ஆனந்த ஜோதிகண்டேன்
கர்த்தவி யப்பொருளே—எதற்கும்
காரணமாம் பொருளே
நித்திய மெய்ப்பொருளே—அந்த
நீயெனச் செப்பிநின்ருள் 6

அவளில்லை யானுமில்லை—அங்கு
யாருமே இல்லையடா
சிவனில்லை ஜீவனில்லை—அங்கு
சிந்தையு மில்லையடா
பழியில்லை பாவமில்லை—அங்கு
பாருமே யில்லையடா
அவமாகப் போச்சுதடா—இந்த
அகலத்தின் வாழ்க்கைநலம் 7

(வேறு) பேடியைப் பழித்தல்.

அடிமை கொண்டாயே—பேடியே
ஆண்மையற்ருயே
மிடியுமுற்ருயே—பேடியே
வீணய்த் திரியாதே 1

அஞ்சிநின்ருயே—பேடியே
அவதியுற்ருயே
துஞ்சிவிடுபோடா—பேடியே
துக்கவாழ்வு வேண்டாம் 2

கால்சட்டையைக் கண்டால்—பேடியே
கலங்குகின்றாயே.
காலங் கொடியதென்று—பேடியே
கழறுகின்றாயே 3

உத்தியோகஸ்தன் முன்னே—பேடியே
உதறலுற்றிடுவாய்
சித்தவுறுதியில்லாப்—பேடியே
சீ! சீ! தூரப்போடா 4

வாத்தியனைக்கண்டால்—பேடியே
மனது கலங்குகிறாய்
ஆத்திரமாய்த்தனியே—பேடியே
அவனைச் சபிக்கிறாயே 5

பேயும் பூதமுமென்று—பேடியே
பேசிப் பயமுறுவாய்
நாயும் உனதுவாழ்வை—பேடியே
நன்றாய்ப் பழிக்குமோடா 6

இந்த வாழ்வைவிடநீ—பேடியே
இறந்திடல் மேலாகும்
சொந்தப் புத்தியில்லாப்—பேடியே
சோம்பலுடையவனே 7

வலிமை யற்றவனே—பேடியே
மாயையுட்பட்டவனே

நலிவையுற்றவனே—பேடியே
ஞானமில்லாதவனே 8

புத்தகங்கள் என்றால்—பேடியே
புத்திமயங்குகின்றாய்
இத்தகை சக்திதானே—பேடியே
இன்ப நிலையந்தரும் 9

ஒன்றுக்குமே உதவாப்—பேடியே
ஓடுகண் முன்நில்லேல்
என்றும் உன்றனுக்குப்—பேடியே
இன்ப மில்லை போடா. 10

குதம்பைச் சித்தர் பாடல்

அன்னையாம் சக்தியின் அன்புபெற்றார்க்கிங்கே
மன்னுமோ பாவமுந்தான்—குதம்பாய்
மன்னுமோ பாவமுந்தான் 1

ஆலவிடமுண்டாள் சூலத்தைப் போற்றினால்
காலன்முன் வருவானோ—குதம்பாய்
காலன்முன் வருவானோ 2

இன்பமென்றே சக்தி அன்பு படைத்தோரைத்
துன்ப மணுகிடுமோ—குதம்பாய்
துன்பமணுகிடுமோ 3

ஈச னிடப்பாக வாசியின்ஜோதியில்
நாசமாகும் அடிமை—குதம்பாய்
நாசமாகும் அடிமை 4

உற்றபொருளென உத்தமியைப்பணி
பற்றுகளொழுந்திடுமே—குதம்பாய்
பற்றுகளொழிந்திடுமே

ஊனமில்லா ஞானமோன நிலையினை
உற்றவர்க்கெல்லாம் ஜயம்—குதம்பாய்
உற்றவர்க்கெல்லாம் ஜயம் 6

எங்கும் நிறைந்தவள் சிங்கம் துணை செய்யின்
பங்கமுறும் பேய்கள்—குதம்பாய்
பங்கமுறும் பேய்கள் 7

ஏகத்தை யோகத்தில் போகித்தறிந்தவர்
சாகத்தயங்கிடாரே—குதம்பாய்
சாகத்தயங்கிடாரே 8

ஒண்பொருள் சக்தி தரிசனஞ்செய்திடில்
உலகம் சக்திமயம்—குதம்பாய்
உலகம் சக்திமயம். 9

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி என்றிடில்
காமத்துயரே தடி—குதம்பாய்
காமத்துயரே தடி. 10

ஔவியம்போற்றுது செவ்வியைப் போற்றிடின்
ஔடதமேதுக்கடி—குதம்பாய்
ஔடத மேதுக்கடி 11

கண்ணன்

(ஆடுபாம்பே-மெட்டு)

துள்ளித்துள்ளித் விளையாடும்கள்ளக்கண்ணா—எம்
தூக்கமதை நீக்கியருள் நல்லகண்ணா
அள்ளிஅள்ளி வெண்ணெயுண்ட ஆயர்கோனே—எம்
ஆரியர்தம் சீரியரில் முதலோனே 1

பாரதப்போரிடையே பாலா சீலா—உன்
பண்பு கொண்டு வெற்றி தந்த கோலாமூலா
பாரகத்தின் வருத்தம் நீ பார்க்க விலையோ—அந்தப்
பரிபவந் தீர்க்க உனக்கென்னமலையோ 2

வேதசார மாகியவுன் கீதாசாரம்—ஞான
வித்தகர் மனத்துளே விளங்குசாரம்
போதசாரம் நீதிசார மெங்கும் பொங்குமே—உற்ற
பூரண கிருபையான தெங்குந்தங்கவே. 3

என்றோ எங்க ளிழிவணைத்து மொழிந்துசாகும்
இடையூறு செய்பவர் உயிர்போகும்
என்றோ நல்ல சுதந்தர வாழ்வு கூடும்—உல
கெங்கு முன்ற னடிமலர் என்று பாடும் 4

வீராதீரா சூரா எங்கள் வேதநாதா—ஞான
வித்தகர் மெய் முக்தர்பணி அம்பொற்பாதா
ஈரநெஞ்சமான அன்புகொண்டதூயா—பற்று .
இற்றவனே குற்றமற்ற கண்ணநேயா 5

கண்ணன்.

(சந்த விருத்தம்)

அண்ணலே யநாதியே அநாதிமுன் அநாதியே
விண்ணுமண்ணும் ஒன்றதாய் விளங்கிகுன்ற சோதியே
பண்ணமைந்த வேணு நாதம் பண்ணுந்தெய்வ பாலனே
கண்ணனே சுதந்தரம் கலந்தவாதி நாதனே 1

பாரதப்போர் நடந்தபோது பார்த்தனுக்கா ளாகியே
மாரதத்தை யோட்டி ஐவர் மாண்பினை நிறுத்தினீர்
பாரதப்போர் இன்றுகாண்பீர் பாரதத்தின் பக்தரின்
மாரதத்தை யோட்டி எங்கள் வாழ்வினை நிறுத்துவீர் 2

வேதசாரம் ஒப்பிலா ஞேதுசாரம் ஓதமெய்க்
கீதசாரம் கீதையின் போதசாரம் கண்டவர்
வாதசாரம் நீக்கிஞான வண்மைசாரம் தேக்கியே
நீதிசார முண்டுமே நிறைந்தசாரம் மண்டுவர் 3

அத்தகைய கீதையில் அறைந்த வீரம் என்றனின்
சித்தமே மகிழ்ந்திடுமெய்ப் புத்தமுத ஆனதால்
கர்த்தனே யுலகமெங்கும் கலந்துநின்ற சோதியே
சுத்தஞானச் செல்வமீந்து சுதந்தரமும் நல்குவாய் 4

மஸ்தான் பாடல்மெட்டு.

பல்லவி

மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்காளென்கூட
வெளியிலே வருவீர்களே மீ

அநுபல்லவி

பாசவினையினுள் பட்டு—தேவி
பக்திபுரிவதை விட்டு
நாசப்படுவதுமேனோ—நாம்
ஞானங்கொள் ஆரியர்தானே மீ

சரணங்கள்

அடித்துப்பிடித்து நமைதுடித்துத்துடிதுடிக்க
மடித்தால் மடித்துக்கொண்டுபோகட்டும்—நமை
கடித்துக்கடித்து (இ)ரத்தம் குடித்துக்குடித்தவர்கள்
களித்தால் களித்துக்கொண்டுசாகட்டும்—மற்றும்
இடித்துச் சிறையிலிட்டுக் கொளித்திவதைத்து எமை
இறுத்து நொறுத்துக்கொண்டுவேகட்டும்—ஞானம்
படித்துப்படித்தபடி நடக்கட்டும் பெருமையர்கள்
பகைத்தால்வதைத்துக்கொண்டேஏகட்டும்-அந்தப்
பாவிகளெனக் கொருசமனு—எம்
பார்வைக்கு அவரென்ன யமனு மீ

தேக மடிந்திடினும் தேகிமடி யானெனும்
தீரரையென்செயும் கத்திகள்—என்றும்
சாகத்தாயரென்று சாவை மதித்திடாச்
சத்தரையென் செயுங்குத்துகள்—உடல்
வேகின்ற காலையும் வந்தேமாதரமெனும்
வீரரை யென்செயும் வெட்டுகள்—இனி
ஏகம்பரம் பொருள்யாமெனச் செப்பியே
இடறுறு மடிமையை வெட்டுவோம்—அந்த
ஈனர்களெனக் கென்னசமனு—என்
எண்ணத்திலவ ரென்ன யமனு மீ

வந்தேமாதரமென்று வந்தேமாதரமென்று
வந்தேமாதரமென்று சொல்லுவோம்—இனி
நந்தேய எதிரிகள் யாவரே யாயினும்
நாசப் படுத்திக்குத்திக்கொல்லுவோம்—மற்றும்
சிந்தைமிக வருந்திச்சிறை செல்லநேரினும்
சிந்தை மகிழ்ந்துயிர்வெல்லுவோம்—இனி
எந்தமை எதிர்ப்பவர் ஒருவருமில்லையென
இன்பசுதந்தரம் வெல்லுவோம்—அந்த
ஈனர்களெனக் கென்னசமனு—என்
எண்ணத்தில் அவரென்ன யமனு மீ

குயிற்பாட்டு.

18/087.

பாடுகுயிலே பண் பாடுகுயிலே—நாம்
பரமனைக் கண்டோமென்று பாடுகுயிலே பா

நாடிப் பலதொழில்கள் செய்திடுவோம்—தேச
நாயகி பதத்தினிலாசைவளர்ப்போம்
கூடி யூறுகளைத் தெறிவோமென்று—உன்
குரலெடுத் தோதிமகிழ்ந் தாடுகுயிலே பா

ஜாதிவேற்றுமையைத் தூரத்தள்ளியே—நல்ல
சமரசமான மெய் யன்புபூண்டு
நீதிநெறியில் நின்றுநிலைப்போமென்று—உன்
நீண்ட குரலெடுத்துப்பாடுகுயிலே பா

கள்ளைக் குடிப்போர்களைக் கடிந்திடுவோம்—ஞானக்
கள்ளைக் குடிப்போர்களைப் பணிந்திடுவோம்

துள்ளுமனத்தைப் பலியாக்கிடுவோம்—தேய
சுதந்தர வாழ்வினில் களித்திடுவோம் பா

பரதேயத்துணிகளை நீக்கிடுவோம்—எங்கள்
பண்பான கதர்த்துணி யணிந்திடுவோம்
கரதலம் குவித்திரு கண்கள்மூடி—ஞானக்
காதல்கொண்டு சிவைபதம் பணிவோம் பா

வந்தே மதரமென்று வாழ்த்திடுவோம்—எங்கள்
வாழ்வைக் குலைப்போர்களைத் தாழ்த்திடுவோம்
நந்தேயக்கொடி எங்கும் பறந்திடுமே—நமை
நசுக்குந் துயரப் பேய்க ளிறந்திடுமே பா

கலித்துறை.

(i) சீராரும் நெற்றித் தனிக்கண் டிறந்தந்தச் செந் தணலைச், சேரார்கள் மீது சொரிந்தவர் தம்மை திகைக் கவைக்கும், ஏராணின் மீது வருந்தேவன் கண்டுள மின் புறவே, காரானைத் தோலைத் தரித்துநின் றுளொரு காரி கையே.

(ii) தெய்வங்க ளேனு மடங்கி யொடுங்கிச் சிதை ந்துசெலும், மைதங்கு வாள்விழி மாதங்கி வீர வலிமை கண்டே, ஐதங்கு மென்னடை யன்னையி னன்புக் ககப் படார்முன், கைதங்கு சூலங் கனன்றுமே கக்குங் கடுங் கனலே.

(iii) வெந்தணல் வீசி வெளிப்படு மங்கையின் வேலதனுல், அந்தக ரான வவுணரைக் குத்தி யவர்த

முடல், செந்தணீ ரைக்கொண்டு சந்தனம் பூசிச் சிறந் திடுவாள், எந்தமைக் காக்கும் ரணபத்ர காளி யெழிலம் மையே.

(iiii) வெறித்தெழுங் கோபவெஞ் சிங்கத்தின் மீது வெறித்துவந்து, செறித்தெழுந் தீயர்தம் நெஞ்சு நடுங் கித் திகைத்திடவே, கறுத்தெழுந் தன்னுருக் காட்டிக் கதித்தெழுங் காதகரை, இறுத்து மொறுத்தும் தெறுத் தும் புடைப்பள் இடாகினியே.

(v) இடாகினிப் பேய்களின் கூட்டங்களைக்கூவி யிக் கணமே, திடீரெனச் சென்று செருநர் மயங்கித் தியங்கி டவே, சடீரெனத் தாக்கிப் புடைத்துப் புடைத்துச் சாடெனவே, படீரெனப் படையைப் படிமீதுகுத்திப் பகருவளே.

(vi) குத்திக் குடரைப் பிளந்ததிற் செம்மைக் குரு திமிகத், தத்தித் தளிர்க்குந் தலைகளைக் கோர்த்தொரு தார்புனைந்து, சத்தி மிகுந்த புயத்தி லணிந்து தளர்வின் றியே, தித்தித் தோமென நடித்திடுவாளெந் தினகரியே.

(vii) கரித்தோலைப் போர்த்திரு கண்கள் சுழற்றிக் கடுஞ்சினங்கொள், அரித்தே ரிவர்ந்து படைக்கோல் விடுத்தங் கனல்கொளுத்தி, எரித்தே பகைவர் இறந்தே யொழிந்திட இன்கடலில், சிரித்தே களித்து நடித்தே குதிப்பள் திகம்பரியே.

(viii) சிங்காரச் சோலை திருமா ளிகையிவை சிந் தியாமல், வெங்கானல் வீசுஞ் சுடலையில் நின்று வெகு

ளியிலாக், கங்கா தரனுட னேவிளை யாடிக் களித்திடு வள், மங்காத வீரியெம் சாம்பவி சாமுண்டி மாதங்கியே.

மதுவிலக்கு விருத்தம்.

மனதினில் மதியைப் போக்கும்
　மாந்தரிற் கடைய னாக்கும்
இனமொடு குலந லத்தை
　இழிவுறச் செய்து போக்கும்
சினமிகக் கொடுக்குந் தேய்க்கும்
　தெருச்சிரித் திடவே வைக்கும்
நினைவதுந் தீமை யாமே
　நிரயத்திற் சேர்க்குங் கள்ளே.

நாமாவளி.

வந்தேமாதர மந்திரமே
வழங்குமிங்கே சுதந்தரமே　　1

இந்தியத்தாயே இன்னமுதே
பந்தமில்சக்தி என்னமுதே　　2

ஆரணியன்பே இளங்குயிலே
நாரணியே நல்ல மடமயிலே　　3

காரணியே கருணாகரியே
பூரணஞான பராபரையே　　4

துக்கக்கடலைக் கடந்தவளே
எக்கணமும் மன்றுள்நடந்தவளே　　5

எங்கும்நிறைந்த பராசக்தி
திங்கள் விளங்குஞ் சடைமுக்தி 6

மாதவன் சோதரி ஸ்ரீதரிலும்
காதலர் தங்களினுதரிலும் 7

யோகியர் யோகியின் காதலிலும்
மோகமில் சங்கரர் தேவியேலும் 8

வீரர்கள் தெய்வமே வித்தகிலும்
சூரர்கள் போற்றிடும் கர்த்தவிலும் 9

வந்தேமாதரம் வந்தே ஓம்
வந்தேமாதரம் வந்தே ஓம் 10

அகவல்.

தேசத் தீரே! தேசத் தீரே
நேசமா யொன்று நிகழ்த்துவன் கேண்மின்
பந்தம் நீங்குமின் பரமனைப் போற்றுமின்
இந்தியத் தாயை யின்பமாய் வாழ்த்துமின்
கதரை யுடுத்துமின் கட்குடி நீக்குமின்
பதியொடு கூடப் பசுவினைக் கூட்டுமின்
பறைய ராயினும் பார்ப்பன ராயினும்
அறைமின் ஒன்றாய் அன்னையின் மந்திரம்
மாதர்கள் கல்வி வளர்ந்து மேலோங்க
ஆதரம் அன்னைமேல் ஆறெனப் பெருக
அமிழ்தெனும் தமிழினில் அனைவரும் பேசங்
சமனென யாவரும் சமரசங் கொள்ள

ஒற்றுமை வழியே பற்றிடச் செய்மின்
உற்றிடும் விடுதலை உணர்வொடு ஞானம்
வாழிய செந்தமிழ் வாழிய விடுதலை
வாழிய பாரதர் வாழிய நற்கதர்
வாழிய அந்தணர் வாழிய ஒற்றுமை
வாழிய ஞானம் வாழிய கர்மம்
வாழிய சக்தி வாழிய சக்தி
வந்தே மாதரம் வந்தே மாதரம்.

வேறு - தமிழின் பெருமை.

அரனின் மகளாகிவந்ததையல்—அது
அகத்தியன்மடியில் வளர்ந்ததையல்
பரமனருள்கொண்ட கவிகள்தையல்—அவர்
பாவினிலாடி நடித்ததையல் 1

சங்கைப்பலகை யிருந்ததையல்—அங்கு
சார்ந்தபுலவர் பணிந்ததையல்
இங்கென்னுயிர்க்கமுதாகும் தையல்—அது
இன்பத்தமிழெனும் அன்புத்தையல் 2

மூன்று அரசர்வளர்த்த தையல்—வேத
முன்னைமா ஞானம் மொழிந்ததையல்
ஆன்றவர் போற்றும் அழகுத்தையல்—தமிழ்
அரசி பலர்நாவும்பாடுந்தையல் 3

கம்பன் கவித்திறங்கண்டதையல்—வில்லி
கவியினல் பாரதம் கொண்டதையல்

நம்டானடியர்தே வாரத்தையல்—விஷ்ணு
நாயகன் புத்தர் நவின்ற தையல் 4

வள்ளுவன் குறளிலே விண்டதையல்—ஞான
மயில் வீரன்சக்தி செறிந்ததையல்
கள்ளமில் வீரம் செறிந்திதையல்—தெய்வக்
கள்ளையுண்டு வெறிகொள்ளும்தையல் 5

சித்தர் முனிவரர் செப்பும் தையல்—அவர்
செய்த மந்த்ர வாசகத்தையல்
அத்துவித நிலை கண்டதையல்—அது
ஆரியர்முன் தேசமாண்ட தையல் 6

அருணகிரிவாக்குக் கொண்டதையல்—எண்ணில்
ஆண்டு கட்குமுன்பேபிறந்த தையல்
கருணைபுரியும் அமுதத் தையல்—அந்தக்
காரணிவாழ்வில் கதித்த தையல் 7

செப்புதற்கரியசிறந்த தையல்—அவள்
தேவர் தையல் மனதாவல் தையல்
ஒப்பிலாஞான உருவத் தையல்—அவள்
உன்னரிய சக்தி மன்னும் தையல் 8

அமிர்தம் அனையஅரிய தையல்—எங்கும்
ஆனந்தமாகி நிறைந்த தையல்
நமை யெலாங்காக்கும் நல்ல தையல்—அருள்
ஞானத் தையல் சிவமோனத் தையல் 9

சக்தி.

தூறவர்—பாட்டு.

எங்கள் துயர் நீங்கவரும்
  இன்பமடா சக்தி
எங்குமே நிறைந்து அருள்
  பொங்குமடா சக்தி
சங்கரனை மாலையிட்ட
  தையலடா சக்தி
சங்கமொடு திகிரிகொண்டான்
  தங்கையடா சக்தி
பங்கமுற அவுணர்படை
  பதைத்ததடா சக்தி
பங்கு அருள் அருளிலெனப்
  பாடவரும் சக்தி
சிங்கமிசை யேறிவரும்
  சிங்கமடா சக்தி
பொங்குமனல் நெற்றிவிழி
  போந்ததடா சக்தி 1

வெற்றிவடி வேலனையே
  பெற்றதடா சக்தி
உற்றவர்க்கு அருள்புரியக்
  கற்றதடா சக்தி
நற்றமிழின் தேவியடா
  நாதமடா சக்தி
நற்றவத்தின் தெய்வமடா
  ஞானமடா சக்தி

முற்றவே துறந்தவர்கள்
முக்தியடா சக்தி
பற்றறுத்த யோகியர்கள்
பாலையடா சக்தி
எற்றியேதான் பாவமெலாம்
ஏங்கவைக்கும் சக்தி
கற்றுவல்ல பக்தர்பணி
காளியடா சக்தி 2

நெஞ்சமதிலே நிறைந்த
நேர்மையடா சக்தி
அஞ்சலெனும் பேயோட்டும்
ஆண்மையடா சக்தி
துஞ்சுவது இல்லையெனத்
துணிவுகொளல் சக்தி
நஞ்செனவே மாயைதனை
நண்ணுதடா சக்தி
தஞ்சமென வந்தவர்கள்
தஞ்சமடா சக்தி
பஞ்சின்மெது வானவடி
பைரவிதான் சக்தி
சஞ்சலங்கள் நீங்கவரும்
சக்தியடா சக்தி
வஞ்சமொழி நெறியதுவே
வண்மைபரா சக்தி. 3

கூற்றனை யுதைத்தெரிந்த
கூற்றேயடா சக்தி
வேற்றுமை யில்லாதவொரு
வெற்றியடா சக்தி
ஆற்றிலுள வெள்ளமென
அருள் வெள்ளம் சக்தி
ஆற்றலடா சக்திஞான
ஊற்றலடா சக்தி
ஏற்றமுடை யன்புபொழி
யின்பமடா சக்தி
ஈற்றிலெந்தப் பொருள்கட்குமேல்
எஞ்சுமடா சக்தி
சீற்றமுடை வீரமுடன்
ஜெயங்கொள்ளல் சக்தி
நாற்றமலி உடலை எண்ணு
ஞானமடா சக்தி
காற்றிலினும் கானலினும்
கடலினினும் சக்தி
ஊற்றினிலும் உடலினிலும்
உயிரினிலும் சக்தி 4

சக்தி பராசக்திபரா
சக்தியென்போம் தம்பி
நித்திய மெய்சக்திபதம்
நெஞ்சகங்கொள் தம்பி
அத்துவிதசக்தி யுயர்
ஆண்மையடா தம்பி

அத்தனிடப்பாக முடை
அன்னையடா தம்பி
எத்தகைய இடையூறும்
ஏகுமடா தம்பி
இத்தரையில் இந்தியத்தாய்
இன்பமடா தம்பி
கர்த்தவியின் கைச்சூலக்
கணக்கைநினை தம்பி
கற்றுவந்தேமாதரஞ் சொல்
கனிவுடனே தம்பி 5

எக்காலக் கண்ணி.

அத்திமா முகன் பாதம்
அறிவுபெற எப்பொழுதும்
சித்தமதி லெண்ணிச்
சிறந்திடுத லெக்காலம் 1

ஆண்மையற்ற பேடியர்போல்
அடிமைநிலை கொள்ளாமல்
மாண்புடைய விடுதலையில்
மகிழ்ந்திருப்பதெக் காலம் 2

கண்ணன்சொன்ன உண்மைநெறி
கண்டு களித்திருந்து
எண்ணமெல்லாம் ஈசன்மேல்
இருத்துவதும் எக்காலம் 3

பார்த்தனெனும் வீரன்போல்
பல்வீரர் தோன்றிநம்தாய்
சீர்த்தி பெறச்செய்திடவே
சிந்தையுற லெக்காலம் 4

வீடுமரின் நெறிபற்றி
வீடறியத் தெரிந்துகொண்டு
கேடுடைய காமமெனும்
கேணிவிடல் எக்காலம் 5

முயற்சித் திருவுடனே
முன்பகீரதன் வழியால்
அயர்ச்சிலா மெய்வாழ்வில்
யாம் வாழ்தலெக்காலம் 6

முன்னோர் நெறிபற்றி
முக்திநிலை சாராமல்
பின்னோர் நெறிசென்று
பிறழல் ஒழிவதென்றோ 7

ஜாதியெனு மஹங்காரச்
சாதனைவிட் டேயொழிந்து
நீதிநெறி நின்றுநாம்
நிலையுறுத லெக்காலம். 8

பராசக்தி யடிபோற்றி
பாரதத்தாய் பண்பாடி
நிராமயத்தி லெஞ்ஞான்றும்
நிறைந்திருப்ப தெக்காலம். 9

பொய்நாக ரீகத்தின்
புழுவெனவே வாழாமல்
மெய்நாக ரீகத்தில்
மேன்மையுற லெக்காலம். 10

ஒன்றே கடவுள்மற்று
மொன்றே உலகமெல்லாம்
ஒன்றேயெல்லாமு மென
உண்மைகொள லெக்காலம் 11

காரணமாம் வாழ்வின்
களிகொண்டு நில்லாமல்
சாரமிலா வாழ்வடைந்தே
சாரமுற லெக்காலம் 12

ஊனுடலை நம்பியே
உழல்வது தானொழிந்து
நான் செத்துத் தானாகும்
ஞானமுற லெக்காலம் 13

காலையில் கடவுள் தியானம்.

காலை வேளையினிலே—புதல்வரைக்
கதிர் கைக ளாயிரத்தால்
சால அணைத்திடவே—அன்பு நலம்
சார்ந்த திருமுகமும்
கோலம் பவளவுரு-கண்டுமே தான்
குவலயம் போற்றிடவே
நீலக் கடலினடி—சூரியன்
நின்று நிமிர்ந்தனனே 1

வானக் கடலிடையே-செவ்வொளி
வாகாய்ப்பரந்ததுவே
ஞானமடைந்ததுவே—உலகெலாம்
நலமிலுறக்கம் நீங்கி
ஞான முதல்வா ஓ—கடலெழு
ஞாயிறு சூரிய ஓ
வான அரசே ஓ—என்றவன்
மக்கள் பணிந்தனரே 2

புள்ளினம் யாவுமே—பறந்தாடிப்
புண்யனைக் கூவினவே
கள்ளக் கருங்காக்கை—அவர் தான்
"கா! கா!" வெனக் கரைந்தார்
கொள்ளை கொள்ளும் சிந்தை—அந்த ஒரு
கோழி "கோ! கோ!" வெனவே
துள்ளித் தன்கை யசைத்ததே ஆதவனைத்
துயா வா வென்றதுவே 3

கொஞ்சுங் கிளிப்பிள்ளை—அதனோடு
கூங் குயில் பாடினவே
அஞ்சும் வடிவுடைய—நாய்கள் தான்
ஆனந்த கோஷமிட்ட
அஞ்சி நின்ற மனிதர் தத்தம்
தூக்கம் போய் ஊக்கமுடன்
தஞ்சமென ஆதவன்—தன்னுடைய
தாளைப் பணிந்தனரே 4

மல்லிகை முல்லையெல்லாம்—மாதவனை
மலர்ந்து வரவுகொண்ட
மொய்யென வண்டுமொய்த்தே—தேனுண்டு
மோகனம் பாடியதே
அல்லிக் குளத்தினடு—உள்ளதோர்
ஆகாயத்தாமரைதான்
மெள்ளமுகம் விரிந்தே—தன்னுருவை
மேகத்திடை கண்டதே 5

தென்றலெனும் பெயரான்—செவ்வேளின்
சேவகன் வீசிமலர்
மன்றலொடிவ் வொலிகள்—மனிதரின்
வாழ்த்தொலி யோடுகூடத்
தன்திருநாயகன்முன்—இசைத்தடி
தாவியே ஓடினனே
இன்றிந்த வேளையிலே—யானுந்தான்
இந்தியாவைத் துதித்தேன் 6

இந்த நல்வேளையிலே—சக்தி ஒளி
எங்கு நிறைந்ததுவே
சுந்தரிவந்து நின்றாள்—எந்தன் யோகச்
சும்மா விருக்கையின்முன்
அந்தரியில் அழிந்தேன்—அழிந்து நான்
அந்தரியாக நின்றேன்
வந்தே மாதரமே—பலகோடி
வந்தே மாதரமே 7

தங்கம் பாட்டு மெட்டு.

பாரதசக்தியடி
பாரிலே முக்தியடி
தாரதம்மிய மில்லாத்—தங்கமே
சமவாழ்வு வேண்டுமடி 1

சுதந்தரதேவியடி
துதித்து மகிழ்வோமடி
சுதந்தரம் பெற்றிடுவோம்—தங்கமே
தூயபரம் நாமேயடி 2

அஞ்சாதிருந் திடடி
ஆண்மைச் செல்வங்கொள்ளடி
அஞ்சாதிருந்தோமாகில்—தங்கமே
துஞ்சாதிருப்போமடி 3

சூலம் பணிவோமடி—எம்
சூலியருள்பாடிக்
காலங்கடந்ததடி—தங்கமே
காளி கங்காளியடி 4

தேசக்கொடி பிடிப்போம்—நம்
தேயத்தைக் காத்திடவே
நாசமாகுமே அடிமை—தங்கமே
ஞானம் பெருகுமடி 5

வந்தேமாதரம் என்போம்
மகிழ்ந்து புகழ் பாடிடுவோம்
வந்தே மாதரமடி—தங்கமே
வந்தேமாதரமடி 6

பல்லி.

குறம்.

சுதந்தரவாழ் வெம்மிடமே ஓடி வருமாயின்
சும்மா இருக்கு நிலை இன்றுவருமாயின்
அதுவிது வென்னாத அத்விதம் வருமாயின்
ஆனந்தமாக ஒரு குறி சொல்லு பல்லி 1

அஞ்சாமை என்னுமோர் ஆண்மை வருமாயின்
ஆருயிர் மதித்திடாத் தீரம் வருமாயின்
துஞ்சாதிருக்குநிலை துள்ளி வருமாயின்
தூய நிலையாக ஒரு குறி சொல்லு பல்லி 2

காளியருட் பொன்னடியைக் காண வருமாயின்
காலங் கடந்த நிலை கதித்து வருமாயின்
ஆளியிலே யிவருமொரு ஆயியருள்கூட
ஆனந்தமாக ஒரு குறி சொல்லுபல்லி 3

தமிழ்ப்பாஷை எங்குமே தழைத்து வருமாயின்
தாயாம் மனோன்மணியின் தயவுவருமாயின்
அமிர்தமுடன் வெற்றி நமை நாடிவருமாயின்
ஆனந்தமாக ஒரு குறி சொல்லு பல்லி 4

வந்தே மாதரகோஷம் எங்கும் வெளியாக்க
வன்மையொடு விடுதலைசேர் மதியும் வருமாயின்
சிந்தை யிறந்தநிலை ஜீவன் சிவமாயின்
சிறந்துநல மோங்க ஒரு குறி சொல்லு பல்லி 5

பஞ்சாப் படுகொலை.

விருத்தம்.

கண்ணகன் ஞாலக் கன்னிகை முகமாம்
கலைமலி இந்திய நாட்டின்
கண்ணெனப் படுநன் னீர்மலி பஞ்சாப்
கண்ணினைக் குத்திடச் சிந்தை
எண்ணினர் பொல்லா விராணுவர் என்னும்
இராக்கதப் பேய்களங் கவர்கள்
பண்ணிய கொடுமை சொல்லிடப் படுமோ
பணமுடி ஆயிரோ னல்லால் 1

எழுதிடக் கைகள் கூசிடும் எண்ணம் எண்ணிட
ஏக்கமுற் றயரும்
வழுமலி அவர்கள் செய்கையை வழுத்த
வாயுமே வெந்திடுமந்தோ

செழுமையே வடிவாய்ச் சிறந்திடும் நாடாம்
சிறுமலர் தனைக்கரத் தெடுத்துப்
பழிமிகக் கசக்கிப் பிழிந்தனர் கண்ணீர்
பாதகர் செய்கையீ தென்னே 2

இருவர்கள் தெருவில் இருந்திடில் அவரை
இருப்பது தவறெனச் சிறையில்
பெருமையாய் அடைப்பர் பேதையர் வாயில்
பேசிடல் பெரியதோர் குற்றம்
ஒருதெரு நடுவில் நடப்பது குற்றம் ஊர்ந்திட
உவந்திடும் சட்டம்
ஒருவரும் இவரைக் கேட்பதற் கிலையோ தெய்வமும்
ஒளித்தது போலும் 3

தருமரின் மனைவி கற்பினிற்கரசி திரௌபதி
தனிப்பெரு மணங்கின்
பெருமைசேர் பெண்கள் மேலெச்சில் துப்பிப்
பேசுதல் போல்நட மெடுப்பார்
இருமையும் பழியே கொண்டிடத் தகுதி ஏற்றனர்
இசைத்திட லாகா
ஒருநிலர் தனிலு நடந்திடாச் செய்கை செய்தனர்
உற்றனர் மகிழ்வே. 4

கால்களு மொடிந்து கைகளுமொடிந்து
கதறிடும் பேர்களைத் தனையோ
மேலெலாம் குருதி வழிந்திட விம்மி
விழிப்புனல் விட்டவர் கணக்கோ
பாலெலாம் வெண்மை கருப்பெலாம் நீராய்ப்
பழியிலா நெஞ்சினை யுடையார்

கிலெலலா முடைய கீழ்விழுந் துயிரை
விடுத்திடச் செய்தனர் கெட்டோர். 5

"வீழ்ந்தனர் தரைமேல் புரண்டனர், உயிர்ப்பு
வீங்கினர் விழிப்புனல் வெள்ளத்
தாழ்ந்தனர் விம்முற் றம்மவோ என்றென்
றாற்றினர், மாதரார் எல்லாம்
சூழ்ந்தவெம் துயர்நீத் துகந்தரு ளென்று
சூலியைப்பணிந்தனர் அங்கு
தாழ்ந்தனர் பல்லோர் தாழ்வினை நீக்கத்
தனிப்பெரு மருந்தொன்று மிலையோ. 6

"சுட்டனன்! சுட்டேன்! மருந்துகள் போம்வரை
சுட்டனன்" என்றனன் அந்தக்
கெட்டவன் டயரவன் கொடுந்தொழில் என்னனக்
கிளப்பது கிளத்திடில் நெஞ்சம்
பட்டிடும் பதறி நடுங்கிடும் விம்மிப் பதைத்திடும்
பதைப்பது இலையேல்
மட்டியோ கல்லோ மரமதோ இரும்போ
மாந்தரில் சேரவும் வலமோ. 7

இத்தகை துன்பம் இழைத்தவர் தம்மை
இராக்கதர் என்றிட லல்லால்
எத்தகை யோரென் றியம்பிட லவர்கள்
இனியுமே துன்பமே இழைப்பார்
சித்தநம் தேவி திருவடிக் கண்ணே
தீரமா யிருத்தியன் னோர்செய்
அத்தனைத் துயருஞ் சகித்திடிற் பின்ன
ரன்னையி னருள்வெளி யாமே. 8

18 இறப்பு நடிப்பு

ஹரேந்திரநாதைத் தழுவி யெழுதியது.

பாவநெருப்பி னிடையினிலே நாமும்
பரதநடனம் செய்தோம்
ஆவல் மிகுந்து சகோதரர் குருதியில்
ஆனந்தக் கூத்திட்டோம் 1

இன்றும் அடிமைச் சக்கரம் நம்மேலே
இடருற உருளல் கண்டும்
இன்றும் நம்மேலேயவ் விராக்கதர் பாதங்கள்
இருந்திடல் கண்டுகொண்டும். 2

இன்றும் அவர்தரும் அற்பக்காசுக்காய் நம்
இனியசதை தருவோம்
கொன்றிட்டாலும் நம் குருதியால் அவர்கள்தம்
கொடியபதம் துடைப்போம். 3

உடலினைக்கட்டி உறுத்திடும் சங்கிலி
உகப்போம் நாம் கண்டுகொண்டே
உடலெரி பசியால் நம் உதரங்குடித்துயர்
ஊதாரிபதம் பணிவோம் 4

எத்தனைநாள்கள் நீ வெட்கத்தினுல் மண்டி
இருந்திடப்போகிறுய் சொல்
மற்ற நாடெல்லாம் சுதந்தர கானத்தால்
வானை நிரப்புதல்காண் 5

எழுமின்! விழிமின்! தொழுமின்! தாய்பதம்
இனியொரு கணந்தனிலே
ஒழிமின் அழிமின் கழிமின் அடிமையாம்
உயிர்தின்னும் வாழ்வினையே 6

அன்றங்கிறந்த சகோதரர் மத்தியில்
அரியநடம் செய்யோம்
வென்று அன்னியரை அடிமைவாழ்வெனும்பேயை
வீட்டி மகிழ்ந்திடுவோம் 7

அன்னை பராசக்தி பாரததேவியே
அற்புத பைரவியே
மன்னிய இன்னல்கள் ஒழிந்துநன் னிலையருள்
வந்தே மாதரமே 8

வருத்தத்தின்மேல் இயக்க வலிமை.

வருத்தத்திற் றோன்றி வருத்தத்தி லோங்கி
வருத்தத்தி லேபெறும் வன்மை---வருத்தத்தில்
அல்லாத ஓரியக்கம் அம்புவியின் மீதினிலே
இல்லையே இல்லையே இல் 1.

உத்தமர்க ளெல்லாம் உலகத்தில் மெய்ஞ்ஞானச்
சத்தியத்தின் சக்தியைத் தாபிக்க—மெத்த
வருத்தமுற்றார் அந்த வருத்தத்தா லன்றோ
பொருத்தமுற்றார் காளிபதப் போது 2.

துக்கத்திற் கேற்ற சுகமென்று சான்றோர்கள்
இக்கணத்தில் இந்தியரை ஈடழிக்க—எக்கலிதான்
தோன்றிடினு மாகாது தோன்றுந் துயரத்தால்
சான்றபயன் கூட்டுமே சக்தி 3

பூட்டரிய மெய்ஞ்ஞானப் புத்தர் புவியிடரை
வீட்டிவிட்த் தன்னாட்டை விட்டேகிக்—காட்டிற்
பெருந்தவமே செய்தன்றோ பீடுபெற உள்ளே
பொருந்தவைத்தா ரின்பமுறும் போதம் 3

வள்ளல் கிருஸ்து பகவானும் மாமுதும்
கொள்ளரிய வெந்துன்பம் கொண்டதால் - விள்ளரிய

தங்கள் மதமாராலுந் தாங்கரிய நன்மதமாய்த்
தங்கவைத்தார் தாரணியில் தான் 5

துன்பின்றி யின்பில்லை தூயபர சக்திபிடம்
அன்புடையார் யாவரே ஆயிடினும்—துன்பமதை
அஞ்சா தெதிர்ப்பின் அடிமைவாழ் வென்னுமிந்த
நஞ்சாகும் துன்பமுறும் நாசம் 6

எங்கும் நாம் கண்டதில்லை எங்கும் நாம் கேட்டதில்லை
இங்கிதமாய்த் துன்பத்தை ஏற்றநிலை—பொங்கியெழும்
பாரதமா தாவீரம் பாழடையா தாயிரம்பேர்
மாரதரெ திர்த்தாலும் வந்து 7

திருப்பள்ளியெழுச்சி.

சூரியன் தோன்றினன் தொலைந்ததே இரவு
தோன்றும் திசையெலாம் சுடரொளிபரந்த
சீரியமுனிவர்கள் சிவையுந்தன் பக்தர்
திருமாலயனொடு தேவரும்யாரும்
பேரிகைவாத்தியப் பேரொலி முழக்கிப்
பெரியாயுந்தனருட் பேருருக்காண
ஆரியர் பலரிங்கு கூடிநிற்கின்றோம்
அம்பிகையேபள்ளி யெழுந்தருளாயே. 1

மல்லிகை முல்லை மலர்ந்தன எல்லாம்
மகரந்தம் சிந்தின வண்டுகள்பாடி
ஒல்லெனமொய்த்தன மலர்களினுள்ளே
ஊறிடும் தேன்துளி மண்டிமயங்கிச்
சில்லென வீசிடும் தென்றலிலாடித்
தெய்வத் திருச்சக்தி ஓம்சக்தியின்றெம்
அல்லலகற்றுதி என்றுமேபாடும்
அம்பிகையேபள்ளி யெழுந்தருளாயே. 2

முரசுமொலித்தது முழங்கின வீணை
முல்லை நிகர்த்தபல் மொய்குழலார்கள்
புரமும் எரித்தவுன் புகழினைப்பாடப்
பொங்கிய சங்கம் பொலிவுறுநாதம்
பரசிவையே என்னைப் பாரென்னும் கோழி
பண்ணவியே கா! கா! என்றிடும் காகம்
அரசியே என்றிடும் கிளியொடு குயிலும்
அம்பிகையேபள்ளி யெழுந்தருளாயே. 3

அவுணர் சிரத்தைச் சிதைத்த இளைப்போ
அவையிலேயாடி நடித்த களைப்போ
கவிகள் கூற்றில் கட்டுண்ட சளைப்போ
கவலை நீக்கிக் கரைந்த மனத்தார்
சிவையே என்றுதம் சிந்தையில் வைத்தார்
சிறையுள் நின்ற வருத்தமோ இன்னம்
அவமாய்த் தூங்கல் அழித்திடு அன்னாய்
அம்பிகையேபள்ளி யெழுந்தருளாயே. 4

எங்கும் நிறைந்தனர் இந்தியபக்தர்
இறைகிறார்வந்தே மாதரமென்றே
செங்கரந்தன்னில் பக்தர்கள் எல்லாரும்
செம்மை பசுமை வெண்மையுங்கலந்த
பங்கமிலாத பதாகையுடன்சீர்
பாடுகிறார்பாடல் வானைப்பிளக்கும்
அங்குன் செவியவர் சொற்கேட்கவில்லையோ
அம்பிகையே! பள்ளி யெழுந்தருளாயே. 5

பாரததேவி வீற்றிருக்கை.

அந்திப் பொழுதினிலே—ஓர்
ஆனந்தசோலை அணுகினன் ஆங்குயான்
சந்தித்த காட்சி தன்னை—இங்கு
சாற்றுவதற்கொரு நாவும்போதுமோ
எந்தவகையிற் சொல்வேன்—எம்
இனிமை சுதந்தர பாரததேவியின்
சுந்தரவீற்றிருக்கை—அதைச்
சொல்லலா மென்னினும் சொல்லச் சொல்லச் சுகம் 1

தொண்டை யடைத்திடுமே—ஆங்கு
துன்பங்கள் நீங்கிடச் சுகத்தின்கற்
கண்டு ரசங்குடித்து—அதில்
கருத்தும் உணர்வும் உயிருமிழந்து
அண்டரும் போற்று நிலை—தனில்
ஆனந்த சக்தி யழகுருக் கண்டனன்
உண்டேனருளமுதம்—அதை
உண்டு பயத்தை உதறி நின்றேனம்மா 2

ஊங்கும் மலர் வாசம்—அதில்
இயங்கும் வண்டுகளிசைக்கும் ரீங்காரமும்
தங்குமிச்சோலையினில்—நல்ல
சாந்தம் நிரம்பித் ததும்பிவழிந்தது.
பங்கமில் தென்றலுமே—வீசி
பரம ஆனந்தங் கொண்டே யுலாவிடச்
சங்கரியாமன்னையே—அவள்
சதானந்தம் கொண்டு குதித்து விளங்கினள் 3

வீரத்திருவிழியும்—மிக்க
வெற்றியருள் திருச்சூலமும் மெய்ஞ்ஞான

தீரத்திரு நெஞ்சமும்—நடு
தெய்வத்தின் தன்மை விளங்கிடவே ஒளிர்
ஆரமுத அருளும்—காண
ஆயிரங்காலம் தவம் செய்தால் போதுமோ
வீரி பராசக்தியே-எம்
விண்ணவர் போற்றும் பண்ணவியே நீலி 4

கையினில் சூலமுடன்—சுகஞானக்
கள்ளையருந்திக் களித்துக்குதித்து நல்
மெய்யுடைய வீரமுடன்—எங்கள்
வித்தகி தோன்றி விளங்குகிறாளதில்
ஐயமுளதேயோ—எம்
அன்னையைப் போற்றி யன்போடு நினைமினே
உய்குவீரே நீங்கள்—அந்த
உத்தமிதன் பெருஞ்சித்துருக் காணுவீர் 5

பக்திமிகுதலுமே—எம்
பைரவிதாளில் பணிந்து மகிழ்ந்து மெய்
முக்தியருணீ என்றேன்—அந்த
முன்னவிதன்னிரு பாதங்களைக்காட்டி
சக்தியருளினளே—அந்தச்
சக்தியினாலே எவரையும் வெல்லுவேன்
நித்தியமும் ஜயமே—உளம்
நெகிழ்ந்து துதித்தனன் வந்தேமாதரம் 6

கீர்த்தனை.

பல்லவி.

அயரா திருமனமே, மனமே, மனமே,
மிக, மிக, மிக. அய

சாணம்.

ஜயமென்பதே எமதுவாழ்வு—தினம்
பயமென்பதே எமது தாழ்வு
துயரமும் பகையும் வெங்கோபமும் பிணியும்
தூக்கியெறியும் நிலையாழ்வு அய

சக்தி ஓம் சக்தி என்றிடுவோம்—எமைச்
சாரும் பவத்தினைக் கொன்றிடுவோம்
பக்தியுமிகுந்திடப் பைரவி பார்வதி
பாரததேவி யென்றிடுவோம் அய

எங்கும் நிறைந்தபொருள் யானே—இனி
எதிர்த்திடல் யாரிங்கெனையே
தங்குபேரொளி சக்திஓம் சக்தி
சார்வதும் என் மனமணையே அய

வந்தேமாதரம் என்று கூறுவோம்—எம்
மாதாதிருக்கொடி கொண்டாடுவோம்
எந்த மெதிரிகளை இடறுற வீட்டியே
ஈர்த்துக் குடரையணிந் தாடுவோம் அய

ஓம்.

RAMATHIRTHAS.

The Secret of Success.

Come hither, come hither, ye merry bind,
And tell me a story do.
Why are you always happy and glad,
And never a thought of sorrow have?

The bird cood softly and whispered low,
The reason is very plain you know.

I love the sun-shine the gay green trees,
The whole of nature the cool cool breeze,

So why should I be sorry and pout,
When nature is laughing around and about.

And is ready and willingly to truly serve me,
With every thing that is necessary.

If only I merrily sing and chisp,
And happily happily to my work.

For nature and I are one you see,
And she is always subservient to me.

இராமதீர்த்தா.

வெற்றியின் மர்மம்.

அகவல்.

வருவாய் ! வருவாய் ! மகிழ் மாங்குயிலே
ஒருநல காதை உரைசெயல் வேண்டும்.
எதனால் என்றும் நீ இன்பம் துய்ப்பது?
வருத்தமே கலவா வாழ்வெங்குற்றனை?
என்றனன் என்றிட இனியபூங் குயிலும்
கூவென்மெதுவாய்க் குயிற்றிய துண்மை
காரணம் யாவரும் கண்டுள தொன்றே.
ஆதவனொளியை, அழகிய மரங்களைக்
குற்றமி லியற்கையைக் குளிர்பூந் தென்றலை
ஆசையிற்கொண்டேன்; அன்பினிற் கூடினேன்

சிரித்தவை யெல்லாம் சிறப்பொடுமகிழ
வருத்தமென் எனக்கு மாட்சிசேரியற்கை
வேண்டிய வெல்லாம் விருப்புற வளிக்கையில்
இன்பத் தேன்விழு மினிய கீதங்கள்
அன்புறச் சொல்லியான் ஆடுவன் ஓடுவன்
இரண்டறப் புணர்ந்தோ மியற்கையும் யானும்
யானே இயற்கை; யானே இயற்கை
என்றும் அடங்கிய தென்னுள் இயற்கை
என்றது குயிலு மினிதே.

வேண்டுகோள்.

ஸ்ரீமான் வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி
இயற்றியது.

(கல்லார்க்கும் கற்றவர்க்கும்—என்ற மெட்டு)

தெய்வவிசு வாசமெங்குஞ் சிறப்பதென்று முருகா !
திடமான தேசபக்தி பிறப்பதென்று முருகா !
நைபவருக் கிரங்குமருள் நயப்பதென்று முருகா !
நாடெங்குஞ் செழித்து நலம் பயப்பதென்று முருகா !

மெய்ம்மறையி னெறியதனை விழைவதென்று முருகா !
வீரவைராக்யமெங்குந் தழைவதென்று முருகா !
கைதவச் சேவகத்தொழிலைக் கடப்பதென்று முருகா !
கைத்தொழிலா மெய்த்தொழிலில் நடப்பதென்றுமுருகா

தன்னயங்கொள் சின்னமதி யொழிவதென்று முருகா !
சமரஸநல் ஞானமழை பொழிவதென்று முருகா !
அன்னைதந்தை தெய்வமெனல் அறிவதென்று முருகா !
அவலமதி தருங்கல்வி குறைவதென்று முருகா !

முன்னவரின் முறைகண்டு முயல்வதென்று முருகா !
மூலன் மூவா யிரந்தமிழும் பயில்வதென்று முருகா !
சின்னச் செய்யுட் குறளினுரை தெளிவதென்றுமுருகா!
தெள்ளுதமிழ்ப் புலமையெங்கும்விளைவதென்றுமுருகா!

கடமையுணர்ந் துழைக்கும்நலங் காண்பதென்றுமுருகா!
கற்றவரை மதிக்குங்கலன் பூண்பதென்று முருகா!
குடிமைகுலம் பிறப்புரிமை கொள்வதென்று முருகா!
கொடியபிறர் வழக்கமெல்லாந் தள்வதென்று முருகா!
மடமையெனும் பெரியபகை மாய்ப்பதென்று முருகா!
மானம்பெரி தென்னுமெண்ணம்வாய்ப்பதென்றுமுருகா!
கொடியிடையார்க் கானகல்வி கொடுப்பதென்று முருகா!
கோழைத்தன மொழியும்வழி யடுப்பதென்று முருகா!

பாலன்ப்ரஹ்லா தன் வழியில் நிற்பதென்று முருகா!
பார்த்தன்தநுர் வித்தையெல்லாங் கற்பதென்று முருகா!
சீலமிக பீஷ்மர்பலர் திகழ்வதென்று முருகா!
சீச்சியெனு மேச்சொழிந்து மகிழ்வதென்று முருகா!
ஓலமிட்டுக் குறையிரத்த லொழிவதென்று முருகா!
ஒருமைகெட்டுப் பிதற்றுமதி அழிவதென்று முருகா!
ஆலமெனும் வறுமையன லவிவதென்று முருகா!
ஆண்டவநீ யரணெனக்கை குவிவதென்று முருகா!

பண்டைப் பகீரதன்முயற்சி பலிப்பதென்று முருகா!
பழிக்கஞ்சும் பரதன்குணம் நிலைப்பதென்று முருகா!
கொண்டற்கொடைக் கர்ணன்குணங் கொள்வ தென்று
[முருகா!

கூசும்பெண்மை யொழிந்து மெய்ம்மை விள்வதென்று
[முருகா!

தண்டித்தடக் குங்கொள்கை தவிர்வதென்று முருகா!

தருமவிர தக்கொடிகள் அவிர்வதென்று முருகா!

பெண்டிர்கற்பிங் கோங்குநலம் பெறுவதென்று முருகா!

பேசரிய மெய்ஞ்ஞான முறுவதென்று முருகா!

Printed at the Noble Press, Madras, S.E.

புத்தகம் கிடைக்குமிடம்.

எஸ். டி. சுப்ரமண்ய யோகி,
அக்ரகாரந் தெரு,
ஈரோடு.

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி.
ராயப்பேட்டை,
சென்னை.

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE, MADRAS.